MIN ALAI

# மின் அலை

August 2025 | Volume : 13 | Issue 8 | Price Rs. 18.00/- | Ann. Sub. Rs. 216/-



தமிழ்நாடு மின்சார வாரிய விஜிலென்ஸ் பிரிவின்
ADGP ஆக பதவியேற்ற திரு.ஆயுஷ் மணி திவாரி, I.P.S அவர்களை
நமது சங்கத்தின் பொறுப்பாளர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

**ERP TRAINING PROGRAMME for O&M Engineers of Tiruvarur on 12.08.205**
**Presided by Dr. S. Sambath, Secretary / Organisation / TNEBES**
**Conducted by Mr.T. Parashuram, Manager / IS / Trichy Metro**





ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

| Page | Contents |
|---|---|
| 7 | Our Representaions |
| 11 | Promotions |
| 13 | உதவி பொறியாளார் (உள்முகத்தேர்வு) வரலாறு– அன்றும் இன்றும் |
| 17 | Chairman's Letters |
| 20 | VRS விதிமுறை |
| 22 | பத்திரிக்கைச் செய்திகள் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 13 ஆகஸ்ட் 2025 இதழ் 8

## வேர்களையும் கவனிப்போம்

பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாடு மின்சார வாரியமானது தனித்துவமானது. பலதர சமூக வல்லுநர்கள் வியக்கும் வண்ணம் அபரிதமான அதிவேகமான வளர்ச்சியை நம் மின்வாரியம் பெற்று வருகிறது. மின்வாரியத்தின் சேவையை தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நித்தமும் அனுபவிக்கின்றனர்.

சராசரியாக ஆண்டொன்றுக்கு சுமார் 6 லட்சம் நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தனிமனித மின்சார உபயோக அளவே குறியீடாக உள்ளது. தொடர்ந்து ஆண்டொன்றுக்கு நூறு யூனிட்டுக்கு மேல் இந்த குறியீடு அதிகரித்து வருவதும் கண்கூடு.

இதுதவிர நமது வாரியத்தின் கட்டமைப்பின் வளர்ச்சி தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் உள்ளது. பல்வேறு சிக்கல்களுக்கு இடையிலும் இந்த வளர்ச்சி சாத்தியமானதற்கு உறுதுணையாக உள்ளது. இது பணியாளர்களின் தன்னலமற்ற உழைப்பே என்பது உணரப்படவேண்டும்.

இதர மாநில மின்வாரியங்களை ஒப்பிடுகையில் அசாத்திய வளர்ச்சியை நமது மின் வாரியம் பெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநிலம் இரட்டை இலக்கு (11.12%) வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தது தேவையான அளவு மின்சாரம், தங்குதடையின்றி வழங்கப்பட்ட மின்சாரமும் தான் என்றால் மிகையாகாது. மின்சாரத்துக்கான உத்தரவாதமே வளர்ச்சிக்கு விதையாகும்.

LT/HT பிரிவுகளில் புதிய மின் இணைப்புகள் லட்சக்கணக்கில் ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்படுகின்றது. மின்வாரியத்தின் வளர்ச்சியானது பன்முகத்தன்மை கொண்டது. புதிய மின் உற்பத்தி நிலையங்கள், வழித்தடங்கள், துணை மின் நிலையங்கள், பசுமை மின் உற்பத்தி நிலையங்கள், ERP implementation in all areas, AI Based LD centre, GIS implementation, Solar roof top programme On line billing, 24 hrs grievance redressal, mobile linking, Application status, Bill status, Transaction details. SMS/Email alert -- என்று பல நிலைகளிலும் மின்வாரியம் -- அபரிதமான முன்னேற்றம் பெற்று தன் வளர்ச்சியை பெருக்கியுள்ளது.

"உடன்குடி"– மின் உற்பத்தி நிலையம் அதி உயரிய நவீன நிலையத்துக்கு எடுத்துக்காட்டாக உருவெடுக்கிறது.

ஆனால் இத்தகைய பெருமைகளைத் தாண்டி மின்வாரியத்தின் உள்கட்டமைப்பை உள்நோக்கி உற்று கவனிக்கும்போது கவலைக்குரியதாக உள்ளது. பரந்து விரிந்து கிளை பரப்பி உயர்ந்து நிற்கும் இந்த ஆலமரத்தின் வேர்களில் பாதிப்புகள் தெரிகிறது. மிக உயரமான கட்டடத்தின் அடித்தளத்தில் பழுது காணப்படுகிறது.

ஆம் – மின்வாரியத்தின் அதிவேக வளர்ச்சியை தாங்கிப் பிடிக்க அனைத்து உள்கட்டமைப்புகளும் வளர்ச்சி விகிதத்திற்கு ஏற்ப முறையாக கட்டமைக்கப்படவில்லை, வலுவேற்றப்படவில்லை.

வளர்ச்சியைத் தொடர்ந்திட தேவையான– Men, Money, Material – என்ற மூன்று காரணிகளிலும் மின்வாரியம் தொய்வுற்ற நிலையில் காணப்படுகிறது. உரிய காலத்தில் இலக்கினை அடைய தங்கு தடையற்ற தளவாட பொருட்கள் இல்லை; அரசு நோக்கத்தை நிறைவேற்ற நிதிநிலை இல்லை; பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய போதிய மனித வளம் இல்லை.

எஞ்சியுள்ளது பணியாளர்களின் தன்னம்பிக்கை மட்டுமே. நிச்சயம் ஒருநாள் இந்த வாரியம் மீண்டு எழும் எனும் உறுதியோடு நித்தம் தம் பணியை போர்க்களப் பணியாய் பாவித்து பணியாற்றுகின்றனர். களத்தில் உள்ள பிரச்சனைகளை கண்டு கொள்ளாமலும், செயல்படுத்த முடியாத உத்தரவுகளை வெளியிடுவதும் இருந்த நிலை மாறி தற்போது களத்திற்குச் சென்று கடைநிலை பணியாளர்களையும் சந்தித்து ஆலோசித்து கருத்துகளை கேட்டு அறிந்து அவர்களின் அன்றாட பிரச்சனைகளையும் அறிந்து தெரிந்து அதற்குத் தக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வரும் ஒரு உன்னதமான வாரியத் தலைவரை பெற்று இருப்பது நெகிழ்ச்சியை தருகிறது.

இன்றைய சூழ்நிலையில் மின்வாரியத்தின் மனித வளம் உட்பட முழுமையான உள்கட்டமைப்பு கீழ் மேலாகவும், கிடைமட்டத்திலும் உறுதிப்படுத்த வேண்டியது, வலுப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவும் அவசிய அவசரத் தேவையாகவும் உள்ளது.

மின்துறையின் வளர்ச்சியே மாநில வளர்ச்சிக்கு அச்சாணி, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே மின்வாரியம் தன் அதிகாரம் கொண்ட துறையாக செயலாற்றி வருகிறது. ஏனைய பொதுத்துறை நிறுவனங்களை போல் மின்துறையையும் கட்டுப்படுத்துவது நியதியாகாது.

இவற்றை உணர்ந்து நமது மாநில அரசு, போதிய நிதி ஒதுக்கீடு மற்றும் பணி நியமன ஒப்புதல்களை விரைந்து வழங்கி, மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையிலும், அரசின் குறிக்கோள்களை எட்டுவதற்கும், மின்வாரியம் உயர்ந்து நின்றிட வழிவகுத்திடுவதே இன்றைய அவசிய தேவை.

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!

வணக்கம். வாரிய தலைவருடனான திட்டமிட்ட 04.03.2025 பேச்சுவார்த்தை மற்றும் அதன் தொடர்ச்சியாக நமது முறையீடுகள் ஆகியவற்றின் பலனாக, உள்முகத்தேர்வு பதவி உயர்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக இறுதி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 25.07.2025 அன்று தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான உத்தேச முன்னுரிமை பட்டியல் பணியமைப்பு நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. (2021 முதல் 2024 வரை பணியில் சேர்ந்த 354 பொறியாளர்களுக்கு) 30.05.2025 அன்று ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர்/இயந்திரவியல் பதவி உயர்வு பட்டியலில் மீதமிருந்த 33 பொறியாளர்களுக்கு (25AE & JE Gr-I) பணியிட ஒதுக்கீட்டுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர் /சிவில் பதவி உயர்வு பட்டியல் கடந்த 25.07.2025 அன்று 26 பொறியாளர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பொறியாளர் சங்கத்தின் தொடர் முயற்சிகளுக்கு பின், கடந்த 28.07.2025 அன்று, உதவி பொறியாளர் / இயந்திரவியல் உள்முகத்தேர்வு 140 நபர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டு பணியிட ஒதுக்கீட்டுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு கிடைக்கப்பட்டுள்ள பொறியாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

கடந்த 07.08.2025 மற்றும் 20.08.2025 ஆகிய தினங்களில் தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களை சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

- புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, இயக்கத்திலுள்ள அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் புதிய பணியிடங்கள் அனுமதி அளித்தல்
- உதவி பொறியாளர் / மின்னியல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்/மின்னியல் உள்முகத்தேர்வு விரைவில் இறுதி செய்து அனுமதி அளித்தல்
- உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுக்கு தகுதியான நபர்களுக்கு தகுதிக்காண் அறிக்கை call for செய்ய
- இளநிலை பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுக்கு பட்டியல் call for செய்தல்
- நிலுவையில் உள்ள விருப்ப ஊர்மாறுதல் விண்ணப்பங்கள் மீது உடனடி பரிசீலினை செய்து ஊர்மாறுதல் உத்தரவுகள் வழங்குதல்.
- இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் (இரண்டாம் நிலை) பதவிகளில் தற்போதுள்ள காலிப்

பணியிடங்களையும் கணக்கில் கொண்டு கூடுதலாக பதவி உயர்வுக்கு call for செய்தல்.

நமது தளராத முயற்சிகளின் பயனாக, நீண்ட காலமாக நிலுவையிலிருந்த உதவி பொறியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வு பதவி உயர்வுகள் இறுதி செய்யப்பட்டு கடந்த 08.08.2025 அன்று 572 நபர்களுக்கு தேர்வு பட்டியல் மற்றும் வட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 12.08.2025 வாரியத் தலைவரை நேரில் சந்தித்து, நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் அன்றைய தினம், கீழ்க்கண்ட கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்யப்பட்டது.

- Class I and II அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் கடந்த காலங்களில் வழங்கியது போலவே, எவ்வித பாகுபாடுமின்றி Class III and IV பணியாளர்களுடன் சேர்த்தே ஊதிய உயர்வினை வழங்குதல்
- உதவி பொறியாளர் / உள்முகத் தேர்வில் விடுபட்ட AMIE விண்ணப்பதாரர்களுக்கும் பதவி உயர்வினை காலதாமதமின்றி வழங்கிடவும், பொறியியல் பட்டம் விண்ணப்பதாரர்களுக்கு இணையாகவே முன்னுரிமை வழங்கிடவும்
- விண்ணப்பித்துள்ள அனைத்து தகுதியான நபர்களுக்கும் தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வினை உடனடியாக இறுதி செய்திட உத்தரவிடவும்
- விநியோகப்பிரிவு பணிகளை தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக கள உதவியாளர்கள் காலிப் பணியிடங்களை அதிகப்படியான எண்ணிக்கையில் நிரப்பிடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நமது தொடர்ச்சியான வலியுறுத்தல்களின் விளைவாக, இளநிலைப் பொறியாளர் / இரண்டாம் நிலை சிவில் உள்முக தேர்வு பதவி உயர்வுகள் 11 நபர்களுக்கு கடந்த 13.08.2025 அன்று பணியமைப்பு நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

40 ஆண்டுகளுக்கும் மேலாக உள்முகத்தேர்வு மற்றும் நேரடி நியமனத்தில் அனுமதிக்கப்பட்டு வந்த, AMIE பொறியியல் பட்டம், தற்போதைய உதவி பொறியாளர் / உள்முகத்தேர்வில், TNEB Service Regulation உள்ள சில சரத்துகளைக் காட்டி அனுமதி மறுக்கப்பட்டதை அறிந்து கடுமையான ஆட்சேபனையுடன், பணியமைப்பு நிர்வாகத்தின் பாரபட்சமான செயல்களை, வாரிய தலைவரின் கவனத்திற்கு தக்க தருணத்தில் உரிய ஆவணங்களுடன் முறையீடுகள் வாயிலாக கொண்டு சென்று விவாதிக்கப்பட்டது. அன்றைய தினமே, நமது ஆட்சேபனையை பணியமைப்பு நிர்வாகத்திற்கும் முறையீடு செய்யப்பட்டு, கடந்த காலங்களைப் போலவே, அரசாணைகளில் அனுமதியளிக்கப்பட்டுள்ள படி, AMIE பொறியியல் பட்டத்தினை, BE / B.Tech பொறியியல் பட்டத்திற்கு இணையான கல்வித் தகுதியாக ஏற்று, உள்முகத்தேர்வில் அனுமதித்திட வேண்டி முறையீடு செய்யப்பட்டுள்ளது.

வாரிய தலைவர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து உள்முகத்தேர்வு பதவி உயர்வில் AMIE விண்ணப்பதாரர்களை இணைக்கும் பணி துவங்கியது.

நமது கடுமையான ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்டு, கடந்த 13.08.2025 அன்று உள்முகத்தேர்வில் விடுபட்ட தகுதியான AMIE விண்ணப்பதாரர்கள் 23 நபர்களுக்கு பணியிட ஒதுக்கீட்டுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பட்டய பொறியாளர்களின் உணர்வுகளுக்கு உரிய மதிப்பளித்து, தவறினை சரிசெய்யும் விதமாக உடனடியாக தகுதியான AMIE விண்ணப்பதாரர்களுக்கும் எவ்வித காலதாமதமுமின்றி பதவி உயர்வு வழங்கிட உத்தரவிட்ட வாரிய தலைவர் அவர்களுக்கும், பணியமைப்பு நிர்வாகத்திற்கும் பொறியாளர் சங்கத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறியாளர் சங்கத்தின் தளராத முயற்சியினால் கடந்த 14.08.2025 அன்று தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து, இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்விற்கு 350 பொறியாளர்களுக்கு தகுதிக்காண் அறிக்கை கோரப்பட்டுள்ளது. (Crucial date 20.03.2025).

கடந்த 19.08.2025 அன்று வாரியத் தலைவரை சந்தித்து

- உதவி பொறியாளர் / இயந்திரவியல் உள்முகத்தேர்வு மூலம் உருவாகியுள்ள தற்போதைய காலிப் பணியிடங்களையும் கருத்தில் கொண்டு, இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுக்கு கூடுதலான பட்டியல் Call for செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது.
  (கடந்த 24.06.2025 அன்று 15 பொறியாளர்களுக்கு மட்டுமே Call for செய்யப்பட்டுள்ளது).
- தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வு உடனடியாக இறுதி செய்து வழங்கிட வலியுறுத்தப்பட்டுள்ளது.
- 01.12.2023 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக வாரியத்தின் முன்வடிவினை விரைந்து வழங்குதல்
- Class I and II அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்குதல்
- துவக்க நிலை பதவிகளில் காலியிடங்களை (குறிப்பாக களஉதவியாளர்) உடனடியாக நிரப்பிட நடவடிக்கை வேண்டுதல்

ஆகிய கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது

நமது தொடர் முறையீட்டின் பயனாக உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்விற்கு 833 நபர்களுக்கு (CHD – 1 நபர், உதவி பொறியாளர் – 616 நபர்கள் மற்றும் இளநிலை பொறியாளர் முதல் நிலை – 216 நபர்கள்) தகுதிக்கான அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வு தொடர்பான நீதிமன்ற வழக்கு கடந்த 28.07.2025, 04.08.2025 & 19.08.2025 ஆகிய தினங்களில் விசாரணைக்கு பின் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காத்திருப்புக்கு பின், பல்வேறு விதமான தடைகளைக் கடந்து, எதிரிகளின் பல்வேறு தரப்பட்ட நெருக்கடிகளை எதிர்கொண்டு, நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளையும் கடந்து, அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும், தன்னலமற்ற பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் திட்டமிட்ட எதிர் நடவடிக்கைகளினாலும், முனைப்புடன் கூடிய முறையீடுகளின் மூலமும், அதன் மீது தளராத செயல்பாடுகள் மூலமும் உதவி பொறியாளர் உள்முகத் தேர்வு பதவி உயர்வுகளை, வாரிய வரலாற்றிலேயே சாதனை நிகழ்வாக மிகுதியான எண்ணிக்கையிலேயே (மின்னியல் 572+23 595: இயந்திரவியல் – 140: சிவில் – 74) பெற்றுத் தரப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த 24.06.2025 மற்றும் 25.06.2025 ஆகிய தினங்களில், பணியமைப்பு நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேச்சுவார்த்தையிலே, பொறியாளர் கழகம் எழுப்பிய உண்மைக்கு புறமான ஆட்சேபனைகளை, உரிய புள்ளி விவரங்களுடன் (1985 முதல் 2025 வரையுள்ள) ஒற்றைக் காகிதத்தால் தகர்த்தெறிந்து, சுமார் 870 எண்ணிக்கையிலே உள்முகத்தேர்வு பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்ற உரத்தவாதத்தினால் எதிர்கொண்டு இன்று வெற்றியும் கண்டுள்ளோம். பதவி உயர்வு பெற்றுள்ள பொறியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். எங்கெல்லாம், எப்போதெல்லாம் பொறியாளர் சங்கத்தின் நடவடிக்கைகளை ஒடுக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோ, அப்போதெல்லாம் சங்கத்தின் பொறுப்பாளர்கள். வீறுகொண்டு எழுந்து, இரட்டிப்பு வேகத்திலேயே சங்கம் பயணிக்க வழிவகை செய்துள்ளனர். இப்பொழுதும் இதுவே நிஜமாகி உள்ளது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க சாதனை உச்சத்தை எட்ட தோளோடு தோளாக ஒத்துழைப்பு நல்கிய சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய வாரிய சூழலிலே, அதிகப்படியான எண்ணிக்கையில் உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் பதவி உயர்வினை நல்கிய வாரிய தலைவர் உள்ளிட்ட வாரிய உயர்மட்ட அதிகாரிகள், தலைமை பொறியாளர் உள்ளிட்ட பணியமைப்பு நிர்வாக அலுவலர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாய் பணியேற்பு செய்துள்ள உதவி பொறியாளர்கள் அனைவரும் வாரிய விதிகளுக்கு உட்பட்டும், உயர் அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டும், கீழ் பணிபுரியும் பணியாளர்களை அன்பாய் அரவணைத்தும், தன்னலமற்ற சேவையினை பொதுமக்களுக்கும் நுகர்வோருக்கும் வழங்கி, வாரியத்தின் நற்பெயரையும் சங்கத்தின் மாண்பையும் காத்திட வேண்டுகிறேன்.

அனைத்து தருணங்களிலும் சாதுர்யமாகவும், நேர்மையுடனும், திறமையுடனும் பணியாற்றிட வேண்டுகிறேன். புதிதாய் பொறுப்பேற்றுள்ள பொறியாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் கிளைப் பொறுப்பாளர்கள் வழங்கி அவர்கள் தம் பணி சிறக்க உதவிட வேண்டுகிறேன். உங்களின் மக்கள் சேவையினை எளிதாக்கிட பொறியாளர் சங்கம் எப்போதும் உதவிக்கரம் நீட்டி துணை நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

20.08.2025 அன்று 2000–2002 உதவிப் பொறியாளர் முன்னுரிமை வழக்கு உச்சநீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கில் நமது தரப்பில் மூத்த வழக்குறைஞர் திரு.நிக்கில் நய்யார் அவர்களும், திரு.ராகவேந்திர ஸ்ரேயாஸ் அவர்களும் ஆஜரானார்கள். நமது தரப்பில் அழுத்தமாக வாதங்கள் வைக்கப்பட்டது. வழக்கு மீண்டும் 24.09.2025 அன்றைய தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திருப்பூர் கிளையின் சார்பில் துணை மின் நிலையங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு 09.08.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. திருவாரூர் கிளையின் சார்பில் ERP பயிற்சி வகுப்பு 12.08.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மிக்க மகிழ்ச்சியுடன் இம்மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் இணைந்தே பயணிப்போம்......

வாழ்க பொறியாளர் சங்கம்... நன்றி.

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

# OUR REPRESENTATIONS

To

**THE CHAIRMAN**

Wage Revision Committee

TNPDCL,

Chennai-600 002.

**Lr.No.GS/TNEBES/F1/ D.08 /2025, Dt. 24.07.2025**

Respected Sir,

Sub: Gross injustice being meted out to the Class – I & II Officers of the Board–Wage Revision entitled to them since 01.12.2023 has been denied citing sinister clause – Withdrawing of clause cited in disputed order and allowing of Wage Revision to Officers as ever necessitated - Requested - Regarding.

Ref: (Per) FB TANGEDCO Proceedings No.14, Dated: 24.05.2023

Tamil Nadu Electricity Board was formed during the year 1957 according to the Electricity Supply Act of 1948. Ever since its formation, its growth has been stead fast and has been one of the indispensable organization not just in the State but the entire Nation. Its progress reflects directly on the growth of the State and in turn the Nation. Also it has its direct impact on the growth of Industries and the General Public.

This has been possible due to the diligent work of the Staff, Officers and Engineers through out. The organization has been headed by different Chairman from time to time and luckily all of them have been tenacious, recognizing the hard work of their Employees and Officers. This quality of recognizing their team made them to fulfill their demands either by themselves or by duly getting the nod from the State Government whenever necessitated.

One such feature extended to them was revision of Wages linked up with revision of Work Load too. The periodicity of this revision of Work Load and Wages has been currently fixed as 4 years which was 5 years earlier.

This feature came into force during the year 1969. So far 12 settlements have been made till date and the benefits have been extended to all working in the Board belonging to the categories of Class – I, II, III and IV under Regular Work Establishment and the Provincial Establishments.

While Boards enters into 12 (3) Settlement in presence of the Labour Department Officials before executing a Board order for implementing the revision of Wages for its Class – III and IV Employees it straight away promulgates an Executive Order for implementing the revision of Wages for Class – I and II Officers. This has been the custom through out these 5 decades.

During the past 2 settlements doubts and queries cropped up from the Government side whether to award Wage Revision benefits to Class – I and II Officers on par with the Class – III and IV Employees every 4 years as their counter parts in State Government are entitled to it once in 10 years only.

The respected Chairman at the helm took up this matter with the Hon'ble Electricity Minister and in turn to the Government Officials concerned, justifying the need for extending the Wage Revision to Class – I and II Officers also and got it done.

Unfortunately they dropped a bombs hell during the last Wage Revision through the order cited under reference by specifically mentioning that “Hence forth Class – I and II Officers in the Board would be entitled for revision once in 10 years only on par with their counter parts in the State Government”.

This is gross injustice to the sincerely working Class – I and II Officers who toil day in and day out tirelessly for the well being of the Board. The pathetic condition is none of the Unions or the Associations representing Class – I and II Officers were informed in advance by the Board of its decision to withdraw this feature to its Class – I and II Officers.

When the matter was raised by us and others to the concerned after seeing the sinister clause in the disputed order cited under reference there was no reply justifying the action. But we understand that the Board wants to treat the Class – I and II Officers in the Board on par with their counterparts in the

State Government which is not at all justifiable.

The next Wage Revision is due from 01.12.2023 and committee has been constituted and talks towards this is slated today on 24.07.2025. Class – I and II Officers are totally demoralized expecting justice anxiously from the present Wage Revision Committee. Hence our plea to include Class – I and II Officers also in the forth coming Wage Revision.

**Justification demanding Wage Revision for Class – I and II Officers:**

- First of all the life of an Electricity Employee is always at stake. Employees including Officers up to the level of Executive Engineers are directly involved in live wire operation. An Electricity Employee including Officer is not guaranteed to return home by the time he steps out of it for Official duties. Workmen and Officers in Board are inseparable. This is a fact and not exaggeration. We can give umpteen examples for this.
- Considering their vulnerable condition and nature of duties they have been given this special treatment and delinked from other Departments awarding them of separate Wage Revision for both Workmen and Officers periodically.

**This magnanimous gesture had been made by one of the Chief Ministers long ago and followed scrupulously since then.**

- In their day to day activities, the Class – I and II Officers in the Board work 24 x 7 on all days through out whereas it's not the case of their counter parts in the State Government who have their free hours after Office and keep away from work on holidays.
- Most of these Class – I and II Officers working in Distribution, Generation and Transmission wings risk their lives at stake while carrying out their duties which isn't the case with other Departments.
- In the after math of natural disaster like Torrential Rain, Flood and Cyclone the Electricity network takes a hit and the total man power from Staff to Directors at the helm are pressed to the field for restoration work which isn't the case with other Departments.
- During the restoration works, Class – I and II Officers including those in the rank of Directors of the Board along with their team roam around the area, sleep in open field without proper food or conveyance and yet put up their fullest efforts in the restoration work which cannot be ignored.
- The Hon'ble Ministers too have witnessed these activities and praised the work of the Staff and the Officers during such restoration works. The situation is not such in other Departments, then how come these justification. The matter should end here itself.
- Above all the Highest Scale of Class – III and IV Workmen and the Lowest Scale of the Class – I and II Officers are kept equal in convention and followed through out these years.

(i.e) The Scale of Pay of Special Grade Foreman in Workmen and that of an Assistant Engineer / Junior Engineer I Grade are equal and one and the same.

**If and when Wage Revision is effected for Class III and IV Workmen alone, the Pay Scale of the Special Grade Foreman will be more than that of the Assistant Engineer / Junior Engineer I Grade which would not only be comical but would result in chaos.**

- More over taking away the benefits extended to these Class – I and II Officers will definitely reflect on their commitment towards their work which would naturally affect the consumers, causing dent on the image of the Board and the Government.
- Even if it is under stood to be an austerity measure it is not at all justifiable as this rule would be totally detrimental to the Board in many ways.
- Hence we pray the Chairman of the Wage Revision Committee to introspect this matter thoroughly and restore the 5 decade old practice of allowing Wage Revision for Class – I and II Officers on par with Class III and IV Employees, as on 01.12.2023 and continue for every 4 years and there by render justice and industrial harmony please.

Thanking You, Madam,

Yours Sincerely,
(V.S. SAMPATHKUMAR)
General Secretary.

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**

TNPDCL,

Chennai-600 002.

**Lr.No.GS/TNEBES/F1/ D.09 /2025, Dt. 01.08.2025**

Respected Sir,

Sub: Calling for made for Promotions to the post of Assistant Engineer by Internal Selection – 4 decade old selection process has been changed – AMIE passed out individuals not considered for selection – left out individuals aggrieved – Intervention of respected Chairman cum Managing Director - Requested - Regarding

Ref: 1) MHRD Gazette Notification No. F.24–6 / 2002 – TS III; Dt: 16.01.2006

2) Permanent B.P.(FB) No.31 (Administrative Branch) Dt 04.12.2000.

Promotions for the post of Assistant Engineer / Electrical, Mechanical and Civil by Internal Selection were called from eligible individuals few months ago. The calling for was made based on our Sangam's persistent representations.

After scrutiny the received applications were processed and Promotions for the post of Assistant Engineer / Civil and Mechanical have been issued. While promotions were issued for all eligible individuals (74 Nos.) in Civil category, it was limited to 140 Nos. based on vacancies in Mechanical category.

To the utter dismay of the individuals and Unions, AMIE qualified persons were left out in the selection process of Mechanical category and we learn that the same is going to be followed for the Electrical category too, which is to be released shortly.

We are totally baffled and can't understand the reason for leaving AMIE qualified candidates in Internal Selection. The regulation governing this matter has been in vogue for more than 4 decades with necessary changes and followed year after year and panel after panel in both the Direct Recruitment and Internal Selection.

There is a long history regarding recognition of AMIE in the Board and Board too has produced some excellent Engineers in the past who have come through the ranks having passed AMIE.

**In the recent Direct Recruitment of Assistant Engineers recruited through TNPSC, Candidates possessing AMIE Degree have been selected and appointed. Then how come AMIE becomes ineligible for Internal Selection alone.**

It is needless to mention that AMIE is issued by the renowned Institution of Engineers India and its merit and value is no way inferior to the Degree in Engineering and it is a notch above the Degree issued by various Universities. Hence the credentials of AMIE could not be questioned.

**Rightly so, Govt. of India has recognized its value vide G.O. cited under reference which clearly states that AMIE is equivalent to Degree awarded in the appropriate Branch of Engineering of the recognized Universities of India.**

Certain clause in the Service Regulation 92 states that "Provided that no candidate possessing the Diploma in Electrical Engineering or a pass in Sections A and B of the AMIE (Ind) Examination shall be eligible for appointment as Assistant Engineer (Electrical) if a suitable candidate possessing the Degree in Electrical Engineering is available for such appointment".

The cited clause above was never invoked all along these 4 decades and both B.E Degree and AMIE were equally treated. But Board intended to make few changes in the process of recruitment pertaining to this category of Assistant Engineers 2 and half decades ago which states to consider both B.E. and AMIE equally as stated below.

Regulation 92 – Class II – Division II states that …..

- Internal Selection and Direct Recruitment shall be made in the ratio of 1:1. Internal selection shall be made xxxxx based on a minimum length of service rendered after acquiring B.E. Degree or equivalent qualification, as may be decided by the Board from time to time.

- Substituted vide (Per) B.P. (FB) No.23 (SB), dated: 12.04.2001.
- xxxxx Expressions omitted vide (Per) B.P.(FB)No.17 (SB), dated 06.03.2002.

The above said B.P. (FB) No.23 (SB), dated: 12.04.2001 has its reference of B.P.(FB) No.31 (Administrative Branch) Dated 04.12.2000 which states that…..

"As per existing provisions in the Service Regulations, the post of Assistant Engineer / Electrical shall be filled in the ratio of 1:1 by internal selection and direct recruitment. The qualification prescribed for the post of Assistant Engineer / Electrical i.e. B.E. / A.M.I.E. Hitherto the selection to the post of Assistant Engineer / Electrical by internal selection was made on the basis of service rendered after acquiring the B.E. / A.M.I.E. degree or its equivalent qualification."

Ever since this amendment in Service Regulation, Board has followed it scrupulously treating both B.E. and AMIE without disdain all along these 2 and half decades.

When the Personnel Administration decided to discriminate these 2 degrees during the present Internal Selection, it ought to have examined it thoroughly, consulted with the higher Officials concerned and brought it to the knowledge of respected Chairman cum Managing Director before its implementation, which we fear didn't happen.

Now it is utter chaos in the mind of the aspirants and its families who have toiled day in and day out for acquiring this AMIE qualification dreaming of attaining this precious Assistant Engineer post. Who will take the blame if something untoward happens to any one of these neglected aspirants?

Hence we bring this matter to the knowledge of the respected Chairman cum Managing Director praying justice in this matter. Moreover we would like to state who the AMIE aspirants are.

They are the ones

- Who are working in far off places like Kundha and other remote places dedicating themselves to the Board, where there is no provision for studying Bachelor in Engineering through parttime.
- Who possessed B.E. Degree in ECE, CS, E&I and IT Engineering at the time of Board entry through compassionate appointment / Direct Recruitment and have passed Section B additionally in AMIE Electrical Engineering in order to bettering their chances of getting Assistant Engineer promotions through internal selection.

Leaving these talented aspirants in the Assistant Engineer promotion list without notice is an absolute disgrace by the Personnel Management which needs to be set right immediately.

We believe the respected Chairman cum Managing Director would do the needful in this matter by instructing the respected Chief Engineer / Personnel to follow the 4 decade old process in the present Panel too by considering the AMIE candidates in Assistant Engineer promotion by Internal Selection and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,

V.S. SAMPATHKUMAR / General Secretary

---

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR**

TNPDCL, Chennai-600 002.

**Lr.No.GS/TNEBES/F1/ D.13 /2025, Dt. 19.08.2025**

Respected Sir,

Sub: Technical Assistant / Mechanical stagnated without JE II Grade promotions - Suitability Report called for meagre numbers – Calling for of additional numbers for filling up of the vacant posts -requested regarding

Ref: Letter No. 037352/291/G5/G52/2025-1. dated: 23.06.2025

Persons working in the post of Technical Assistant / Mechanical have been left stagnated without Promotions for more than a decade. Legal proceedings in a Seniority case has been a reason for this due to which promotions for the post of Junior Engineer / Mechanical I Grade could not be operated leading to cascading stagnation in this Junior Engineer / Mechanical category.

Based on our Sangam's persistent representation suitability report was called among 15 Nos. Technical Assistants for promotion to the post of Junior Engineer / Mechanical II Grade vide reference cited above under the crucial date of 20.03.2025. The calling for was based on the vacancies at that period.

Among the called for persons in the cited reference many have been promoted recently as Assistant Engineer / Mechanical through Internal Selection. Hence processing the called for list as such wouldn't benefit many, barring few who still remain as Technical Assistant / Mechanical.

Moreover few more vacancies (Around 20 Nos.) in the post of Junior Engineer / Mechanical II Grade has aroused presently due to Assistant Engineer / Mechanical promotion through Internal Selection. Enhancement of the called for list to few others would be very much beneficial for most persons who are starved of promotions.

Hence we request the intervention of the respected Chairman cum Managing Director in this matter to insist the Chief Engineer / Personnel to call for additional persons in the category of Technical Assistant / Mechanical for promotion to the post of Junior Engineer / Mechanical II Grade and thus render justice please.

Thanking You, Sir,

Yours Sincerely,

V.S. SAMPATHKUMAR/ General Secretary

# PROMOTIONS :

**Assistant Execuitve Engineer / Mechanical Promotions** – Allotment orders issued for 33 Engineers.
Ref : Memo. No.042137/G.2/G.2(1)/2024-21, Dated 25.07.2025
1.Santhana Muthu Kumar. R 33. Prabhakaran.M

A**ssistant Engineer / Mechanical** Selected by Internal Selection - Allotment orders issued for 140 Engineers.
Ref : Memo. No.045764/145/G.12/G.121/2025-1, Dated 28.07.2025
1. Selvakumar. M 140. Sekar C

**Assistant Engineer / Electrical** Selected by Internal Selection – Allotment orders issued for 572 Engineers.
Ref : Memo. No.047651/G.11/G.112/2025-3, Dated 07.08.2025
1. Chinnaraju.P 572. Sathya.R

**Assistant Engineer / Electrical** Selected by Internal Selection (AMIE) - Allotment orders issued for 23 Engineers.
Ref: Memo. No.047651/G.11/G.112/2025-6, Dated 13.08.2025
1. Vasudevan P.G. 23. Jothilakshmi.M

**Junior Engineer/Civil – Grade II** by Internal selection orders issued for 11 Engineers.
Ref : Memo. No. 1000007423 / 051820/475/G.5/G.52/2025-1,DATED:13.08.2025.
1. Hariharan.N 11. Nagauthra.A

T**echnical Assistant to Junior Engineer Grade II (Electrical)** Promotions – Suitability called for 350 persons.
Letter No.: 022405/G4/G41/2025-2, Dated 07.08.2025.
Crucial Date :20.03.2025. Last Date for sending Particulars :20.08.2025
1. Palaniyappa. S 2.Manoharan.K

**Assistant Engineer / Electrical** Suitability called for 833 Engineers.
Ref : Lr. No.049985/G.1/G1(1)/2025, Dated 21.08.2025
CHD.1. Shyamala.P
AE/E.1. Savariraj.R 616. Varunkumar.G
JE/E1. Mohanarangan.E 216 Vaitheghi.R

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 31.07.2025 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. **Er. R.NATARAJAN,** AEE /Genl. / CE.D Office / T.V.Malai, GCM / T.V.Malai, Thiruvannamalai Branch. Ph. 9442414171
2. **Er. D.GOVINDARAJU,** AEE / Shift / 230 KV SS / Veerapuram, Former President / Chennai South, Chengalpattu Branch. Ph. 9445364175
3. **Er. S.NAGARAJAN,** EE / Elec. / EM II / TTPS, Former President / Namakkal, TTPS Branch. Ph.9715518150
4. **Er. M.LOGANATHAN,** AEE / O&M / Rural Polur, Former Vice President / T.V.Malai, Thiruvannamalai Branch. Ph. 9444816493
5. **Er. S.ANBUNATHAN,** AEE / Shift / 230 KV SS / Kovilur, Former Vice President / Sivaganga, Sivaganga Branch. Ph.9488621214
6. **Er. S.EKANTHALINGAM,** EE / Elec. / EM III / TTPS, Former Org. Secy. / TTPS, TTPS Branch. Ph.9442252145
7. **Er. P.VASANTHAKUMAR,** JE I / Enforcement / Villupuram, Former DS / Kandamangalam, Villupuram Branch. Ph.9894766940
8. **Er. P.SOUNDARARAJAN,** EE / O&M / Avadi, Chennai West Branch. Ph.9445663996
9. **Er. P.S.SIVAKUMAR,** EE / P&C / Chennai, HQ Branch. Ph. 9840879586
10. **Er. V.SUDHAKAR**, AEE/Shift / 230 KV SS / Koyambedu, Chennai West Branch. Ph.81489 67525
11. **Er. K.A.ANBU,** AEE / Shift / 230KV SS / Siruseri, Chennai South Branch. Ph.9445418127
12. **Er. Y.KRISHNAN,** AEE / Shift / 230KV SS / Porur, Chennai South Branch. Ph. 9962145600
13. **Er. G.MAHALINGAM,** AEE / Spl. Mtce. / MRT / Chengalpattu, Chengalpattu Branch. Ph.9092262540
14. **Er. S.KANNAN,** AEE / O&M / Rural Pudukkottai, Pudukkottai Branch. Ph.8144727337
15. **Er. T.MURALITHARAN,** AEE N.I. / M / O&E / MTPS I, MTPS Branch.Ph.93448 95983
16. **Er. P.S.THIRUGNANASAMBANDAN,** AE / O&M / Cooks Road, Chennai Central Branch. Ph.9444918493
17. **Er. P.BALAKRISHNAN,** AE / Mtce. / 110 KV GIS SS / High Court, Chennai Central Branch. Ph.9094246183
18. **Er. A.SHANMUGAM,** JE I / Mtce. / Kanjanur SS, Villupuram Branch. Ph. 9003585058
19. **Er. S.BALASUBRAMANIAM,** JE I / Mtce. / 110 KV SS / Adhamangalam, Thiruvannamalai Branch. Ph. 7667782632
20. **Er. K.GEETHA,** JE I / Elec. / Operation / NCTPP III, NCTPS Branch. Ph. 73390 23860

**VOLUNTARY RETIREMENT**

1. **Er. A.KANNAN,** AEE / Shift / 400 / 230 KV SS / Karamadai, Former Branch Treasurer / Covai, Coimbatore Branch. Ph. 99428 99222 (As on 22.07.2025)
2. **Er. R.THIYAGARAJAN,** EE / O&M / Manaparai, Trichy Branch. Ph. 9486710875 (As on 31.07.2025)

## உதவிப் பொறியாளர் (உள்முகத்தேர்வு)
## ஒரு வரலாறு – அன்றும் இன்றும்

அன்பு பொறியாளர்களே,

உதவிப் பொறியாளர் (உள்முகத்தேர்வு) பல எதிர்பார்ப்புகளையும், சில எதிர்ப்புகளையும் கொண்ட ஒரு போராட்ட வரலாறு.

70ம் ஆண்டுக்கு முன்னதாக பட்டயம் பெற்றோர் பகுதிநேர பட்டம் படிக்க வழியில்லை. பகுதிநேரப் பட்டம் என்பதே அப்பொழுது இல்லை. வேண்டுமானால் AMIE படிக்கலாம். அதனால் பட்டயம் படித்தவர்கள் வாரியத்தில் உதவிப் பொறியாளராக முடியாது. AMIE கல்வி அந்த காலகட்டத்தில் BE-க்கு இணையானதாக தமிழக பல்கலைகழகங்களால் அங்கீகரிக்கப்படவில்லை. மின்வாரிய விதிகளில் Sec. A & B முடித்து ஓராண்டு காலம் அனுபவம் பெற்றோர் AEஆக தேர்வு செய்யப்படலாம். ஆனால் தகுதிபடைத்த BE படித்தோர் மாநிலத்தில் இல்லாத பொழுது மட்டும் தான் AMIE தேர்வு செய்யப்படலாம். இது அலை ஓய்ந்த பின் கடலாடும் கதை.

1970ல் Diploma Engineers Council of Tamilnadu–ன் முதல் மாநில மாநாடு நடைபெற்றது. பொதுப் பணித்துறையின் அமைச்சர் திரு.**S.J.**சாதிக்பாட்சா மாநாட்டில் பங்கேற்றார். PWD பொறியியல் சங்கத்தின் தலைவர் அப்பாஸ், மந்திரியிடம் கோரினார். "டிப்ளமா கல்வி தாழ்ந்ததனால், எங்களை கல்வி ரீதியாக உயர்த்திக்கொள்ள என்ன வழி, நீங்கள் அளித்த கல்வியை நீங்களே தாழ்ந்ததென்றால், எங்களுக்கு ஏன் அந்த கல்வியை அளித்தீர்கள்" என்றார். இந்த மாநாட்டில் தான் பகுதிநேர பட்டக் கல்விக்கு வழி பிறந்தது. பின்னர் 1971ம் ஆண்டில் அன்று இருந்த பொறியியல் கல்லுாரியிலும், பகுதிநேரப் பட்டப்படிப்பு துவங்கியது.

Engineering Diploma Holders Association (EDHA)–வின் 16.03.1973–ல் நடந்தேறிய முதல் மாநாட்டில் வைக்கப்பட்ட 8 கோரிக்கைகளில் AMIE கல்வி பெற்றோரை உதவிப் பொறியாளராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஒன்று.

1973–ம் ஆண்டு நடந்த பல்லவ மண்டல மாநாட்டில் மின்துறை அமைச்சர் திரு.O.P.ராமன் அவர்கள், AMIE பெற்றோருக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டை அறிவித்தார்.

1971–ம் ஆண்டு துவக்கப்பட்ட பகுதிநேர பட்டம் பயின்றவர்கள் 1974–ம் ஆண்டு டிசம்பரில் பட்டக் கல்வி முடித்து வெளிவந்தனர். அதற்கு முன்னரே (அக்டோபரில்) வாரியத்தில் உதவிப் பொறியாளர் நியமனம் முடிந்து விட்டது. இதில் ஒரு AMIE படித்தோர் தேர்வு செய்யப்படவில்லை. 1975–ம் ஆண்டு நவம்பரில் தகுதிபடைத்தவர்கள் வாரியத்திலேயே இருக்கும் பொழுது வெளித்தேர்வு (Direct Recruitment) தேவையில்லை என்று வாரியம் ஓர் கொள்கை முடிவை எடுத்தது (BP 1703 Dt.29.11.75).

1975ம் ஆண்டில் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரானார். அவர் AMIE கல்வியை B.E.க்கு சமமாக அறிவித்து M.Tech. தேர்வுக்கு தகுதி படைத்ததாக்கினார்.

முதன் முதலில் வாரியத்தில் 1976–ம் ஆண்டில் உதவிப் பொறியாளர் (உள்முகத் தேர்வு) நடைபெற்றது. ஆண்டுதோறும் உதவிப் பொறியாளர் (உள்முகத் தேர்வு) வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் வாரியத்திற்கு நேர்முகத் தேர்வு (Direct Recruitment)–ம் வேண்டுமென வலியுறுத்தினர். உதவிப் பொறியாளர் பதவிகளில் உள்முகத் தேர்வுக்கும் நேர்முகத் தேர்வுக்கும் இடையே 2:1 விகிதாச்சாரம் கொண்டு வந்தது வாரியம் (BP 635 DT.22.11.82).

பகுதிநேரப் பட்டம் பயிலும் இடங்களிலெல்லாம், பகுதிநேரப் பட்டம் பயில விண்ணப்பங்களை அனுப்புவதில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. கோவை, மதுரை, திருச்சி மையங்களில் இது தொடரும் பிரச்சனையானது. திருச்சியில், "பகுதிநேரப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பங்களை அனுப்பக்கூடாது" எனப் போலியான FAX ஒன்று அனுப்பப்பட்டது.

1984ம் ஆண்டில் திரு.B.விஜயராகவன் அவர்கள் வாரியத் தலைவரான பிறகு அவரிடம், பகுதிநேரப் பட்டப்படிப்பால், வேலை கெடுவதாக கூறப்பட்டு, விண்ணப்பங்களை அனுப்ப மறுத்தது வாரியம். விண்ணப்பங்களை அனுப்புவதற்காக நாம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றோம். பின்னர்

வாரியம் உதவிப் பொறியாளர் விகிதாசாரத்தை உள்முகத் தேர்வுக்கு 1 என்றும், நேரடி நியமனத்திற்கு 3 என்றும் ஒரு கடுமையான மாற்றத்தை கொண்டு வந்தது (BP 80 DT.21.7.84). இதனை எதிர்த்து வழக்கு தொடுத்தது சங்கம்.

பகுதிநேரப் பட்டப்படிப்பிற்காக சங்கம் தொடுத்த வழக்குகளின் எதிர்வினையாக சங்கத்தின் தலைவர் அவர்கள் கோவையிலிருந்து திருவாரூர்க்கு மாற்றப்பட்டார். பகுதிநேரப் பட்டம் படிக்கதேர்வு பெற்ற விண்ணப்பதாரர்களை குறிப்பாக, திருச்சியில் ஊர்மாறுதலுக்கு உள்ளானார்கள். பகுதிநேர பட்டம் படிப்போரின் ஊர்மாறுதலுக்கு தடையுத்தரவினைப் பெற்றது சங்கம். ஆனால் தடையுத்தரவை அமல்படுத்தவில்லை வாரியம். சம்பளமின்றி 6 மாதகாலம் ஏனைய உறுப்பினர்களின் உதவியுடன் தாக்கு பிடித்தனர். செப்டம்பரில் தடையுத்தரவை நீக்கியது நீதிமன்றம். அனுமதியின்றி பகுதிநேரப் படிப்பு பெற்றோர் பலர் தென்னாற்காடு மாவட்டத்தில் இடைநீக்கம் செய்யப்பட்டனர். என்றாலும் 1:3 விகிதாச்சாரம் குறித்த நிலையை வாரியம் மாற்றிக்கொண்டது. இதனை 1:1 என மாற்றியது (BP 5 DT.1.12.85). இதுவே பணி விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது. மேற்கூறியவற்றில் 83–ம் ஆண்டிலிருந்து 86–ம் ஆண்டுவரை உள்முகத்தேர்வு நின்றுபோனது. 1986–ல் மீண்டும் உதவிப் பொறியாளர் உள்முகத் தேர்வு நடைபெற்றது. ஆனால் பகுதிநேரப் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பங்களை அனுப்புவது தடைபட்டுபோனது.

7.6.87–ல் நடைபெற்ற Engineering Diploma Holders Association (EDHA)–ன் இரண்டாவது மாநில மாநாட்டில் பகுதிநேரப் பட்டம் பயில விண்ணப்பங்களை அனுப்ப கோரிக்கை முன் வைக்கப்பட்டது. எனினும் இது தொடரும் கோரிக்கையாகவேயிருந்தது. 27.1.88–ல் விண்ணப்பங்களை அனுப்புவதை கிட்டத்தட்ட நிறுத்தியது வாரியம். நமது போராட்டங்களின் தொடர் விளைவால் 1989 ஆம் ஆண்டில் மீண்டும் பகுதிநேரப் பட்டம் பயில விண்ணப்பங்களை அனுப்பபட்டது.

படிப்படியாக இதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. கல்லூரிக்கும் பணியிடத்திற்கும் உள்ள தூரம், முறைப்பணியில் பணியாற்றுவோர் பகுதிநேரப் படிப்புக்கான இடஒதுக்கீடு போன்றவை தளர்த்தப்பட்டன.

இடைப்பட்ட காலத்தில் பகுதிநேரப் பட்டபடிப்பை இழிவுபடுத்தும் முயற்சிகள் தொடர்ந்தன. பகுதிநேர பட்டப் படிப்புக்கு ஒரே பெயர் இருப்பதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் அதற்கு BE (Part Time) என பட்டம் வழங்க வேண்டும் என்ற முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றனர். பகுதிநேரப் பட்டம் "மட்டம்" என்றும் "இரவில் படித்தவர்கள்" என பிரச்சாரம் செய்யப்பட்டது. இணைபட்டம் மட்டம் என்றால் தான், தாங்கள் பெற்ற பட்டம் உயர்வு என பறைசாற்ற முடியும். இதுவும் ஒரு சமூக ஜாதிய ஏற்றத்தாழ்வே.

இதனைத் தான் BP 31, DT.4.12.2000 சொல்கிறது. பகுதிநேரப் பட்டம் பெற்றவர்கள் உள்முகத் தேர்வுக்கு தேர்வு (Exam) வைக்க "not having adequate knowledge...." எனக் காரணம் சொல்கிறது. அன்றைய வாரிய உத்தரவு என்றாலும், இது "எப்போதும் கேட்ட குரல் தான்" நமக்கு. வழக்கு நீதிமன்றம் சென்றது. BP 31, DT.4.12.2000 பாதிக்கப்பட்டவர்களே வழக்குத் தொடர வேண்டுமென சங்கம் கேட்டுக்கொண்டதன் பேரில் 126 பொறியாளர்கள் வழக்கு தொடர்ந்தனர். நீதிமன்றம் Exam–ஐ ரத்து செய்தது.

தொடர்ந்து செல்வி.B.கீதாலட்சுமி உள்முகத்தேர்வுக்கு பரீட்சை ரத்து செய்தது சரியல்ல என 2001–ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்து தடையுத்திரவினை பெற்றார். இந்த இடைக்காலத் தடையுத்தரவை ரத்து செய்ய நாம் வழக்குத் தொடர்ந்த பொழுது தடையுத்திரவை நீக்ககூடாது என குறிக்கிட்டது பொறியாளர் கழகம். நமது வழக்கின் மூலமாக இடைக்கால தடையுத்திரவினை நீக்கி உள்முகத்தேர்வு பெற்றோம்.

செல்வி.B.கீதாலட்சுமி 2001 ல் தொடர்ந்த வழக்கோடு, தமிழ்நாடு பட்டப் பொறியாளர் கழகத்தின் (Tamil Graduate Engineers Association) சார்பில் 2002–ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கும் இணைக்கப்பட்டு 2 நீதிபதிகள் கொண்ட அமர்வில் விசாரனை நடைபெற்றது. இந்த வழக்கின் இறுதி தீர்ப்பு 2012 ஆண்டு உள்முகத் தேர்வினை உறுதி செய்தது.

தீர்ப்பில் ...

8. Admittedly, there are two channels of recruitment, one is direct and another is for in-service candidates. For in-service candidates, there is no written examination and the challenge made is that written examination is

also to be held to them on par with the direct recruits. The challenge made by the petitioners cannot be sustained as it is not upheld by the Court. It is not at all the case of the petitioners that the chances of selection of the direct recruitees is in any way affected because of the impugned proceedings providing for 1 : 1 ratio for in-services candidates. So long as the ratio is strictly maintained by the respondent Board, neither the prospective direct recruits nor the internal selectees could have any grievance.

10. The contention of the learned counsel for the petitioner is that the respondent Board did not prescribe a common or similar type of examination for external selection and internal selection is only to be rejected because selection of a candidate for a selection post is within the domain of the employer and the decision of the Board cannot be interfered with."

இடையில் ஒரு வழக்கு திரு.T.சிவகுமார், தமிழ்நாடு பட்டப் பொறியாளர் கழகம் (Tamil Graduate Engineers Association) அவர்களால் 2004–ம் ஆண்டு தொடரப்பட்டது. இவ்வழக்கு மாண்புமிகு தலைமை நீதிபதியுடன் கூடிய டிவிஷன் பெஞ்சில் மேலும் சில வழக்குகளுடன் சேர்த்து விசாரிக்கப்பட்ட வழக்கு

“31. In Writ Petition No.1846 of 2004, the challenge is to the order rejecting the request of the petitioner to follow the 1:1 ratio while filing up the post of Assistant Engineer. The impugned order therein was passed when there was a ban in direct recruitment. We are informed that the ban has been lifted and the petitioner has already been issued with a call letter dated 29.08.2005. Hence, the writ petition has become infructuous and the same is hereby dismissed as so. No costs.’’ என்று கூறி தள்ளுபடி செய்யப்பட்டது.

மீண்டும் 2006–ல், S.ரமேஷ், அவர்கள் பெயரில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டு உள்முகத்தேர்வுக்கு தடையேற்படுத்திட முயற்சி செய்யப்பட்டது. பொறியாளர் சங்கம் இந்த வழக்குகளில் தன்னை இணைத்துக் கொண்டு தடையினை தடுத்து உள்முகத்தேர்வினை பெற்றுத்தந்தது.

இது கடந்த காலம் என்று ஒதுக்கிவிட வேண்டாம்.

சிலருக்கு தங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்கத் தெரியாது, ஆனால் அடுத்தவர்களுக்கு வருவதை தடுக்க மட்டுமே தெரியும்.

2024–ம் ஆண்டில் நாம் உள்முகத்தேர்வு வழங்கிட வாரியத்தில் வலியுறுத்தி வந்த நேரத்தில், வாரியத்தில் இல்லாத விகிதாசாரத்தையும், உண்மை இல்லாத தரவுகளையும் அளித்து நமக்கு உள்முகதேர்வுகள் போடக்கூடாது என்று தடுத்தனர். நாம் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களிடமும், பணியமைப்பு நிர்வாகத்திடமும் உண்மையான தரவுகளையும் அளித்து நமக்கு உரிமையான பங்கினை வழங்கிட கேட்டுக்கொண்டோம். நமது தொடர் முறையீட்டினை தொடர்ந்து 24.01.2024 அன்று உதவிப் பொறியாளர் உள்முகத்தேர்வுக்கு விண்ணப்பங்களை கேட்டது நிர்வாகம். விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை இறுதிக்கட்டத்தை எட்டியது. இதனை பொறுத்துக் கொள்ள முடியாமல் S.அரவிந், S.ஆகாஷ், ஆகியோர் பெயரில் உதவிப்பொறியாளர் இயந்திரவியலினை எதிர்த்தும், V.சுருதி M.நேதாஜி ஆகியோர் பெயரில் உதவிப்பொறியாளர் உள்முகத்தேர்வு மின்னியலை எதிர்த்தும் டிசம்பர் மாதத்தில் சென்னையில் வழக்கு தொடுக்கப்பட்டு தடை உத்தரவு பெற முயற்சிக்கப்பட்டது. வழக்கில் பொறியாளர் சங்கம் மட்டுமே தன்னை இணைத்துக்கொண்டு தடையுத்தரவு கிடைக்காமல் தடுத்தது. மீண்டும் இதே முயற்சியினை P.ராஜ்குமார் S.கண்ணதாசன், J.சுந்தரேசன் ஆகியோர் பெயரில் மதுரையிலும் வழக்கு தொடுக்கப்பட்டு தடையுத்தரவு பெற முயற்சிக்கப்பட்டது. அவ்வழக்கிலும் பொறியாளர் சங்கம் மட்டுமே தன்னை இணைத்துக்கொண்டு தடையுத்தரவு கிடைக்காமல் தடுத்தது. இத்தடையெல்லாம் தாண்டி இறுதி நிலையினை எட்டியது உதவி பொறியாளர் உள்முகதேர்வு.

மீண்டும் வேறு ஒரு வழியில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. உச்சநீதிமன்றத்தில் வேறு ஒரு வழக்கில் அரசாங்கத்தில் நடைபெறும் அணைத்து நியமனங்களுக்கும் மெரிட் அடிப்படையில் மட்டுமே முன்னுரிமை போடப்பட வேண்டும், கம்யூனிட்டி ரோஸ்டர்படி போடக்கூடாது என்ற உத்தரவு வெளியிடப்பட்டு இருந்தது. இதனை நமது நிறுவனத்தில் அமல்படுத்துவது குறித்தும், பெண்களுக்கான ஒதுக்கீடு குறித்தும் தெளிவுரை கேட்டு தமிழக அரசின் மனித வளத்துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டது. இக்கோப்பு குறித்து அரசு தெளிவுரை வழங்காமல் தாமதித்தது, வாரியத் தலைவர் கேட்டுக்கொண்டதை தொடர்ந்து பொறியாளர் சங்கம் தமிழக அரசின் மனித வளத்துறையின் செயலாளர் அவர்களையும் அத்துறையின் அலுவலர்களையும் சந்தித்து அவர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு நமது நிர்வாகத்திலிருந்து தரவுகளை

பெற்றுத் தருவதற்கு உதவி அரசுத்தரப்பிலிருந்து கருத்துருவை பெற்றுத்தந்தோம்.

எல்லாம் முடிந்து உதவிப்பொறியாளர் / சிவில் உள்முகத்தேர்வு வெளியிடப்பட்டது.

மீண்டும் தங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்கத் தெரியாத அமைப்பு உள்முகத்தேர்வு, விகிதாசாரத்தை விட அதிகமாக உள்ளது, அதனால் உள்முகத்தேர்வு போடக்கூடாது என்று நிர்வாகத்திற்கு முறையீடு அளித்தது. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் நம்மை அழைத்து நமது தரப்பு கருத்தை கேட்க கூறினார். இதனிடையில் உதவி பொறியாளர் நேரடி நியமனம் 211 நபர்களுக்கு வழங்கப்பட்டது, மேலும் 400 நபர்களுக்கு TNPSC மூலமாக அறிவிக்கப்பட்டது. நமக்கு ஏற்கனவே அனுமதிக்கபட்டிருந்த 350க்கு மேலாக பெறுவதற்கு நாம் இந்த பேச்சுவார்த்தையை பயன்படுத்திக்கொண்டோம். நமது தரப்பில் இருந்து 1985 முதல் உள்முகத்தேர்வு மற்றும் நேரடி நியமனம் போடப்பட்ட விவரங்களை நிர்வாகத்திற்கு அளித்து நமக்கு கூடுதலாக போடவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.

நமது தரவுகள் மற்றும் நிர்வாகத்தின் தரவுகளும் ஒன்றாகவே இருந்தது. இதனை ஏற்று உதவி பொறியாளர் உள்முகத்தேர்வு மின்னியல் கூடுதலாக போடுவது என்று நிர்வாகத்தால் முடிவு செய்யப்பட்டு, 28.07.2025 அன்று 140 பொறியாளர்களுக்கு உதவி பொறியாளர் உள்முகத்தேர்வு/இயந்திரவியல் வழங்கப்பட்டது, 07.08.2025 அன்று 572 பொறியாளர்களுக்கு உதவி பொறியாளர்/மின்னியல் உள்முகத்தேர்வு வழங்கப்பட்டது.

இதில் AMIE படித்தவர்கள் தேர்ந்து எடுக்கப்படவில்லை. இதற்கு நமது பொறியாளர்களே காரணம். இதனை முறையாக நமது வாரிய ஆணைகள், அரசின் ஆணைகள் ஆகியவற்றை அளித்து அவர்களையும் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று நாம் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களிடத்தில் முறையீடு அளித்து கேட்டுக்கொண்டோம். 13.08.2025 அன்று 23 AMIE படித்தவர்களுக்கு உதவி பொறியாளர் உள்முகத்தேர்வு மின்னியல் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு உள்முகத்தேர்வின் போதும் எதிர்த்து வழக்கு தொடர்வதும், அதை பொறியாளர் சங்கம் வழக்காடி வெற்றி பெறுவதும் தொடர் கதையாகவே இருந்து வந்தது. இத்தனை தடைகளுக்கும் ஆரம்ப முதலே காரணகர்த்தாவை தெரிந்திருந்தாலும், ஆரம்பகால உள்முகத்தேர்வு AE–களில் பலர் இந்த குரலுக்கு ஆதரவாக அந்த இயக்கத்தில் பங்குகொள்வது கேள்வி குறியாகவே உள்ளது.

எல்லாம் முடியும் நேரத்தில் ஒரு முறையீட்டை மட்டும் அளித்துவிட்டு தாங்கள் தான் உள்முகதேர்வுக்கு ஆபத்பாந்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்களையும், தாங்கள் தான் பெற்றுத்தந்தோம் என்று பேனர் அடிக்கும் அமைப்புகளையும் அடையாளம் கண்டு ஒதுக்கித் தள்ளிட உள்முகத்தேர்வு AEகளை பொறியாளர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

நமது சங்கம் ஒவ்வொரு பதவி உயர்வுக்கும், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், முறையீடுகள், முறையீடுகள் சார்ந்து அத்துறை அதிகாரிகளிடம் நடத்தும் பேச்சுவார்த்தைகள் போன்றவற்றை வெளிப்படை தன்மையுடன் உடனுக்குடன் whatsapp மூலம் அனைத்து பொறியாளர் சங்க உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தி வருகிறது.

ஆகவே உதவி பொறியாளர் உள்முகத்தேர்வில் சங்கம் மேற்கொண்ட தொடர் முயற்சிகளை உறுப்பினர் அல்லாத உள்முகத்தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிய தகவல்களை தெரிவித்து, அவர்களையும் நம் அமைப்பில் சேர்த்திட, வழி மேற்கொள்வது நமது அனைவரின் கடமையாகும்.

போராட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை, 07.06.2022 அன்று முதல் எந்த பதவிக்கும் உள்முகதேர்வு இல்லை என்று வாரிய ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனை நீக்கி மீண்டும் உள்முகதேர்வினை பெற்றிட வேண்டும். அதற்கான முயற்சியை பொறியாளர் சங்கம் எடுத்து வருகிறது.

போராட்டம் புதிதல்ல சங்கத்திற்கு, போற்றலும், தூற்றலும், பொருட்டல்ல, வெற்றிக்கனி என்றுமே நம் கையில்தான். கல்வி என்றும் இழிந்ததல்ல என்ற கொள்கை ஏற்கனவே செதுக்கப்பட்டுவிட்ட சரித்திரம்.

பொர்.நே.ரா.செந்தில்
பொதுப் பொருளாளர்

## CHAIRMAN'S LETTERS

From. 31.7.2025

Dr.J.Radhakrishnan, I.A.S. Additional Chief Secretary
Chairman & ManagingDirector,
TNEBLtd. & TNPDCL Chairman,
TNPGCL, TANTRANSCO & TNGECL

To:
Joint Managing Director,
Managing Directors of TANTRANSCO, TNPGCL, TNGECL,
All Directors, Chief Engineers, Superintending Engineers, and Officers concerned

Subject: Ensuring Adequate Essential Spares at State, Regional, and District Levels for Uninterrupted Power Supply and Prompt Rectification of Faults – Reg.

Dearall,

You are well aware of the importance of ensuring seamless, assured, and quality power supply to support uninterrupted functioning across all consumer sectors. While efforts are ongoing to enhance generation, equal emphasis must be placed on operations, transmission, distribution, and the associated domains of finance, process, manpower, equipment, and spares.

In this context, it is essential that we remain fully prepared to handle potential challenges, disruptions, or faults by putting in place robust systems, including:

- Timely finalization of Annual Maintenance Contracts(AMCs)
- Ensuring availability of critical spares across all essential equipment and machinery
- Stockingsparesbasedonpastexperienceandestablishednorms,whichever is higher

Given the scale of our operations and the approaching monsoon season, any delay due to non-availability of spares or slow file movement must be proactively prevented.

Allwings are directed to:

1. Review and initiate procurement of necessary spares well in advance.
2. Ensure inter-wing coordination to avoid any lapses in supply chain or logistics.
3. Adhere strictly to statutory timelines for procurement and approvals.
4. Avoid undue delays at individual levels, including in proposal follow-ups, file processing, placing orders, and monitoring timely supply.

Let me reiterate that any failure in planning, coordination, or timely action— especially in matters related to procurement and emergency preparedness— will be viewed seriously.

This instruction is applicable to all wings without exception, and compliance will be reviewed.

With regards,
Dr.J.Radhakrishnan,
I.A.S. Additional Chief Secretary CMD, TNEB Ltd., TNPDCL
Chairman, TNPGCL, TANTRANSCO & TNGECL

---

From the Desk of CMD, TNEB / TANGEDCO & TANTRANSCO Date: 17.08.2025

Dear colleagues,

Subject : State-wide Mass Cleaning & Upkeep Drive - Phase-wise instructions for field offices, sub-stations, transformer yards and connected premises

1. Background : A pilot was executed at Kottivakkam TNEB office, demonstrating tangible improvements in housekeeping, public interface and safety (reference photos enclosed). In parallel, with Greater Chennai Corporation (GCC) we have raised plinth levels and installed view-cutters, and have already spruced up 1,500 locations out of a target of 3,000+ transformer points. Districts were earlier advised

to follow up; while progress is visible in several TANTRANSCO and TNPDCL/TANGEDCO substations, field offices and public-facing assets now need special attention.\

2. Objective: Undertake a time-bound, phased mass cleaning and facility-upkeep drive across all field establishments to ensure cleanliness, safety, and a professional public interface.

3. Scope of Work (minimum)

- Housekeeping & debris removal: Clear vegetation, litter, condemned/obsolete spares and scrap from yards, cable trenches, RMU/DB surroundings, and offices.
- Safe disposal: Segregate, account and e-auction/scrap as per rules; no on-premise dumping.
- Civil repairs: Patch floors/drains, repair plinths, repair/secure compound walls & gates; raise ground levels at water-logging sites in coordination with local bodies.
- Color-washing & painting: Buildings, compound walls, grills and equipment supports; anti-rust treatment where required.
- Signage upgrade: Remove outdated/rusted boards; install new standardized boards (non-rust materials) with consumer-friendly information.
- Public messaging (IEC): Use walls for safety messages, energy conservation tips, and to showcase nearby generation plants/substations (as in the pilot mural).
- Sanitation & welfare: Provide/renovate toilets for employees, ensure drinking water points, and repair & restore existing staff quarters where feasible. This should be given topmost priority.
- Electrical safety housekeeping: Proper cable dressing, fencing / barricading of hazardous zones, danger notices, Lockout-Tagout (LOTO) compliance, fire extinguishers & first-aid kits.
- Transformer/RMU points: Install/repair view-cutters, maintain clear access, and keep surroundings litter-free-priority for markets, public places and prominent locations.
- Coordination: Work with GCC/ULBs/Highways/Metro/Railways for kerb / footpath, drain desilting, and debris lifting.

Funding: Use O&M allocations; additionally leverage IEC components under eligible schemes (to be firmed up with District Collectors), CSR where permissible, and scrap/e-auction proceeds as per rules.

4. Phasing & Timelines

Phase-1 (0-60 days):

- Each SE/EE to identify Top 10% priority sites (markets, bus stands, hospitals, high-footfall offices, accident-prone locations).
- Nominate a Nodal AE/JE for each site.
- Complete cleaning, debris removal, colour-wash, signage upgrade, IEC messaging, and transformer/RMU point view-cutters for these sites within two months.

Phase-II (beyond 60 days up to 1 year or more):

- Progressive expansion to cover all remaining field premises, substations, and transformer yards in a phased manner, aligning with financial tie-up and sanction of works.
- Circles/Divisions to plan quarterly rollouts based on priority, fund availability, and coordination with local bodies.

Continuous:

- Upkeep through monthly housekeeping cycles, inspections, and surprise checks to ensure sustainability.

5. Reporting & Monitoring

- Fortnightly status to HQ (every alternate Monday):
- Site ID, location, asset type; actions completed; before/after photos; expenditure head; constraints, next-fortnight plan.

Dashboards at Circle/Region level to be reviewed by CE/SE every fortnight.

Random inspections by Regional CES/SEs; non-compliance will be viewed seriously.

6. Safety & Compliance (non-negotiable)

- Follow Lockout-Tagout (LOTO) procedures, barricade live yards, and obtain shutdowns where

required.

- Ensure PPE for all workers and safe handling of scrap (oil, cables, metal).
- All works must comply with electrical, labour and environmental norms.

7. Deliverables (Phase-I minimum per Circle)

1. All identified priority transformer/RMU points fitted with view-cutters and cleaned.
2. All front-office counters and consumer-facing areas refurbished (clean grills/counters, queue systems, functional signage, complaint info displayed).
3. One model office/sub-station per Division demonstrating complete makeover (housekeeping, mural/IEC wall, upgraded boards, toilets restored).

8. Accountability

SEs / Division Heads are responsible for execution; Regional CEs will guide and consolidate. HQ will publish fortnightly comparative progress.

Let us use this drive to set a visible, safer, cleaner standard across Tamil Nadu's power infrastructure and build public confidence.

(J. Radhakrishnan, IAS)
Chairman & Managing Director
TNEB/TANGEDCO & TANTRANSCO

**Annexure-A**
**Fortnightly Report**

Headings

1. Circle/Division/Section | Asset Type (Office/SS/DT/RMU/JB) | Location & GPS
2. Issues observed (pre-work)
3. Actions taken (debris removal/repairs/painting/signage/IEC/toilets/quarters)
4. Coordination with ULB/ Collectorate (if any)
5. Expenditure head (O&M/IEC/CSR/others)
6. Photos: Before/After (2 each)
7. Risks & Safety compliance (shutdown/LOTO/PPE)
8. Next-fortnight plan & expected completion date

**Annexure - B**
**Standardised Signage & View-Cutter Specs (indicative)**

- Non-rust aluminum composite/FRP board; reflective lettering; bilingual (Tamil/English).
- Danger signs per IS standards; consumer info (section office phone, 24x7 fuse call, complaint portal).
- View-cutter height & fixing per utility standard; ensure drain path not blocked; maintain 1 m clear margin around plinth.

**Annexure-C**
**Summary for Quick Reference (for Field Officers)**

- Phase-I (60 days): Top 10% priority sites clean, paint, remove debris, fix view-cutters, IEC wall, upgrade boards.
- Phase-II (1 year+): All remaining sites in phases based on financial tie-up/sanction.
- Continuous: Monthly housekeeping cycles, surprise inspections.
- Scope of Work: Clean premises, dispose scrap, civil repairs, color-wash, new signage, IEC murals, toilets, restore quarters.
- Safety: Strict Lockout-Tagout (LOTO), PPE, barricades, shutdowns wherever needed with due intimation to customers and all concerned..
- Reporting: Fortnightly with before/after photos; Circle dashboards; HQ monitoring.

Deliverables (Phase-I per Circle):

1. All priority transformer/RMU points cleaned & with view-cutters.
2. Front-office counters refurbished.
3. One model office/sub-station per Division.

## VRS – விருப்ப ஓய்வு பெற விழைவோர் கீழ்க்காணும் விதிமுறைகளைத் தெரிந்துக் கொள்வது அவசியம்.

அரசுப் பணியிலிருந்து தற்போது விருப்ப ஓய்வு பெற விழைவோர் விருப்ப ஓய்வு பற்றிய கீழ்க்காணும் விதிமுறைகளைத் தெரிந்து கொள்வது அவசியம்.

**நிகர பணிக்காலம்**

ஒருவர் 20 ஆண்டுகள் பணி நிறைவு செய்துவிட்டால் விருப்ப ஓய்வு பெறலாம்தான். ஆனால், 20 ஆண்டு பணி என்பது மொத்த பணிக்காலம் அல்ல. அதாவது, அரசு ஊழியர் ஒருவர் 01.04.2002 அன்று பணியில் சேர்ந்திருப்பார் எனில், 31.03.2022–ம் தேதியுடன் 20 வருடம் நிறைவு பெறுகிறது. இது (Gross service) மொத்த பணிக்காலம்தான்.

இந்த மொத்த பணிக்காலத்தில் அந்த ஊழியர், மருத்துவச் சான்று சமர்ப்பிக்காமலே எடுத்துக்கொண்ட சம்பளமில்லாத விடுப்பு, தண்டனை என அறிவிக்கப்பட்ட பணிக்காலம், ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு பணிமாற்றம் செய்யப்பட்டபோது தகுதிக்குமேல் எடுத்துக்கொண்ட பணியேற்பு இடைக்காலம், வரண்முறை (Regulation) செய்யப்படாத பணிக்காலம், பிள்ளைப்பருவ பணி (18 வயதுக்குக் கீழ் உள்ளபோது செய்த பணி) ஆகிய அனைத்தும் தகுதியற்ற பணிக்காலம் எனப்படும். மொத்த பணிக் காலத்தில், தகுதியற்ற பணிக்காலத்தை கழித்தது போக நிகர பணிக்காலம் 20 ஆண்டு இருக்க வேண்டும் என்பது விருப்ப ஓய்வுக்கு அவசியம்.

**மூன்று மாத நோட்டீஸ் அவசியம்**

20 வருட நிகரப்பணியை ஓர் ஊழியர் நிறைவு செய்து முடித்திருந்தாலும், ஒருவர் நினைத்த மாத்திரத்தில் விருப்ப ஓய்வு பெற்றுவிட முடியாது. இதற்கான மூன்று மாத முன்னறிவிப்பு அவசியம். அதாவது, 30.04.2022 பிற்பகல் ஓய்வு பெற விரும்பும் ஊழியரின் விருப்ப ஓய்வு விண்ணப்பம் அதை அனுமதிக்கும் அதிகாரம் பெற்ற நியமன அதிகாரிக்கு (Appointing authority) 01.02.22–க்குள் கிடைத்திருக்க வேண்டும். இதுதான் மூன்று மாத நோட்டீஸ் காலம்.

**அனுமதிக்குப் பிறகுதான் அடுத்த நடவடிக்கை**

வயது முதிர்வில் (அதாவது, 60 வயது பூர்த்தியான பிறகு) ஓய்வு பெறுவது Superannuation எனப்படுகிறது. இவ்வாறு யாரெல்லாம் அடுத்த ஆறு மாதங்களில் (அல்லது ஒரு வருடத்தில்) 60 வயதை அடையப்போகிறார்களோ, அதைக் கண்காணித்து ஓய்வுக்கால பணப்பலன் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு வசதியாக ஒவ்வோர் அலுவலகத்திலும் ஒரு பதிவேடு பராமரிக்கப்படுகிறது.

இதன்படி ஊழியர் ஓய்வு பெறுவதற்கு ஆறுமாதம் முன்பே கூட ஊழியரிடமிருந்து ஓய்வுக்கால பணப்பலன் பெறுவதற்கான விண்ணப்பத்தைப் பெற்று அலுவலகத்தின் பரிந்துரையுடன் மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்பட்டுவிடும். இதன் பயனாக ஊழியர் ஓய்வு பெறும் தேதிக்கு முன்பே அவரது ஓய்வுக்கால பணப்பலன் ஆணைகள் மாநிலக் கணக்காயரிடமிருந்து வந்து காத்துக்கிடக்கும். ஓய்வு பெற்ற மறுநாளே ஓய்வுக்கால பணப்பலன்களை பெற்றுவிடலாம்.

ஆனால், விருப்ப ஓய்வில் செல்பவர்களுக்கு இந்த வசதி கிடையாது. அதாவது, அவர் விருப்ப ஓய்வு கோரும் தேதிக்கு முன்பே ஓய்வுக்கால பணப்பலன் விண்ணப்பம் மாநிலக் கணக்காயாருக்கு அனுப்பப்பட மாட்டாது. அந்த ஊழியர் விருப்ப ஓய்வு கேட்ட தேதிக்குப் பிறகே, அதற்கான ஆணை வரப் பெற்றபின் ஓய்வுக்காலப் பணப்பலன் விண்ணப்பம் மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்படும். இதனால் தாமதம் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இந்த விதிமுறை தெரியாத சிலர் வயது முதிர்வுத் தேதிக்கு இரண்டு, மூன்று மாதத்துக்கு முன்பே விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்தாலும், இயல்பான தேதிக்குப் பிறகே பணப்பலன் கிடைக்கும். எனவே, ஓய்வுக்கு இன்னும் சில மாதங்களே இருப்பவர்கள், அந்த முடிவை எடுப்பதில் சற்று பொறுமை காட்டுவது நல்லது !

**அரையாண்டு கணக்கீடுதான்...**

ஓய்வூதியப் பலன்களான ஓய்வூதியம், பணிக்கொடை இரண்டுக்கும் பணிக்காலம் (Service period) என்பது அரையாண்டுகளில் கணக்கிடப் படுகிறது. அதாவது, ஓர் ஊழியர் 25 ஆண்டு பணி முடித்தவர் எனில், அவரது பணிக்காலம் 50 அரையாண்டுகள் என எடுத்துக் கொள்ளப்படும்.

ஒருவர் 22 ஆண்டும் 2 மாதமும் 29 நாளும் பணி நிறைவு செய்திருந்தால், அவரது பணிக்காலம் 22 ஆண்டுகள் என எடுத்துக்கொள்ளப்படும். அதாவது, 44 அரையாண்டுகளாகக் கணக்கிடப்படும். ஆனால்,

22 ஆண்டும் 3 மாதமும் பணி நிறைவு செய்திருந்தால், இவரது பணி என்பது 45 அரையாண்டு களாகக் கணக்கிடப்படும். அதாவது, 2 மாதம் 29 நாள் வரையான பணிக்காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது. மூன்று மாதம் என்பது ஓர் அரையாண்டாகக் கணக்கிடப்பட்டுவிடும். இதன்படி 8 மாதம் 29 நாள் என்பது ஓர் அரையாண்டுகளாக கணக்கிடப்படும். 9 மாதம் என்பது இரண்டு அரையாண்டு களாகக் கணக்கில் சேரும்.

விருப்ப ஓய்வு பெறுபவர் மேற்கண்ட கணக்கீட்டைப் புரிந்துகொண்டு, விருப்ப ஓய்வு தேதியைத் தேர்வு செய்தால் லாபகரமாக இருக்கும். அதாவது, மேற்கண்ட 22 ஆண்டு 2 மாதம் 29 நாள் பணி செய்திருப்பவர் இன்னும் ஒரே ஒரு நாள் தாமதித்து தனது விருப்ப ஓய்வுத் தேதியை நிர்ணயம் செய்வதன் மூலம் ஓர் அரையாண்டுக்கான கூடுதல் பணப்பலன் பெறலாம். அதாவது, அடிப்படைச் சம்பளம் 90,000 பெறுபவர் மேற்கண்டபடி கணக்கிட்டு ஓர் அரையாண்டை தனது சர்வீஸில் சேர்ப்பார் எனில், அவரது உடனடிப் பணப்பலன் ஆச்சர்யப்பட வைக்கும்.

அதாவது, 20 வயதில் அரசுப் பணியில் சேர்ந்து தனது 43–வது வயதில் விருப்ப ஓய்வு பெறும் ஊழியர், தான் தேர்வு செய்த விருப்ப ஓய்வுத் தேதியை ஒரே ஒரு நாள் ஒத்திவைப்பதன் மூலம் தனது இயல்பான பென்ஷன் கம்யூடேசன் தொகையான 14,61,078 ரூபாய்க்குப் பதிலாக 14,88,135 ரூபாய் பெறுவார். அதாவது, ஒரே ஒரு நாள் விருப்ப ஓய்வைத் தள்ளிபோடுவதற்கான வெகுமதி 27,057 ரூபாய்.

இதே போல், தனது பணிக் கொடையாக 15,91,650 ரூபாய் பெற்றிருக்க வேண்டியவர் 16,21,125 ரூபாயைப் பெறுவார். விருப்ப ஓய்வில் செய்த ஒரு நாள் தாமதம் அள்ளித்தரும் தொகை 29,475 ரூபாய். இதையெல்லாம்விட 53,055 ரூபாயை பென்ஷனாகப் பெறவேண்டிய இவர் 54,038 ரூபாயை தனது மாதாந்தர பென்ஷனாகப் பெறுவார். ஒவ்வொரு மாதமும் இவருக்குக் கூடுதலாகக் கிடைக்கும் பென்ஷன் 983 ரூபாய். கால ஓட்டத்தில் இந்த 903 ரூபாய் 5,000, 6,000 ஆகக்கூட உயரலாம்.

**முழு சர்வீஸ்**

இன்னும் சிலர், '30 வருஷம் சர்வீஸ் முடிஞ்சு போச்சு. இதுக்கு மேல் சர்வீஸ் பண்ணி எதுவும் அதிகமாகக் கிடைக்கப் போவதில்லை' என்று நினைக்கின்றனர். உண்மை அப்படி அல்ல. பென்ஷனுக்குத்தான் முழு சர்வீஸ் என்பது 30 வருடம் ஆகும். பணிக்கொடைக்கு முழு சர்வீஸ் என்பது 33 வருடம் ஆகும். அதாவது, 30 வருடம் பணி முடித்தால் கடைசியாக வாங்கிய அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவிகிதத்தை பென்ஷனாகப் பெறலாம். இதுதான் முழு பென்ஷன் பெறுவதற்கான கணக்கு. ஆனால், பணிக்கொடை 15 மாத சம்பளத் தொகையாக இருக்கும். 33 வருடம் பணி நிறைவு செய்தால், பணிக்கொடை என்பது 16.5 மாத சம்பளம் கிடைக்கும் என்பதை விருப்ப ஓய்வு பெற நினைப்பவர்கள் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**சம்பள கமிஷன்**

தற்போதைய பணத்தேவையைத் தவிர்க்கக்கூடிய அல்லது தள்ளிப்போட முடிந்தவர்களுக்கு, பணிக்காலம் இன்னும் நிறைய மீதி இருக்குமானால், வரப்போகும் எட்டாவது சம்பள கமிஷன் வரைக்கூட பணியில் நீடிக்கலாம். காரணம், சம்பள கமிஷன் பரிந்துரை ஓய்வூதியம், பென்ஷன் கம்யூடேசன் போன்றவற்றை இரு மடங்காகக்கூட அதிகரித்தாலும் ஆச்சரியமில்லை. இதற்காகக் காத்திருக்க வேண்டியது இன்னும் நான்கு ஆண்டுகள் மட்டுமே.

எனவே, விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பிக்கும் முன் மேற்கண்ட காரணிகளைப் பரிசீலித்து முடிவெடுப்பது நல்லது. 45 வயதில் ஓய்வு பெற்று சுமார் 40 வருட ஓய்வுக் கால வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் கவனத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும்!

**விருப்ப ஓய்வுக்கான முழுமையான விதி!**

சுமார் 30 வயது வாக்கில் அரசுப் பணியில் சேர்ந்த ஓர் ஊழியர் தற்போது 50 வயதினராக இருப்பார். உடல் நலிவு அல்லது நிதித் தேவை காரணமாக இவருக்கும் கூட விருப்ப ஓய்வு தவிர்க்க முடியாததாக இருக்கலாம். என்றாலும், தனது பணிக்காலம் 20 ஆண்டுக்கு குறைவாக இருப்பதன் காரணமாக இவர் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்திருக்க மாட்டார். காரணம், விருப்ப ஓய்வு பற்றிய விதியில் ஒரு பகுதி மட்டுமே பரவலாகத் தெரிந்திருக்கிறது. அதன் மற்றொரு பகுதி அவ்வளவாகத் தெரியவில்லை. அதாவது, '20 வருடப்பணி செய்தவர் அல்லது 50 வயதானவர் விருப்ப ஓய்வு பெறலாம்' என்பதே அந்த விதி. எனவே, இத்தகைய 50 வயதினரும் விருப்ப ஓய்வு கோரலாம்.

– நன்றி வலைத்தள பதிவு

## மின் வாரியத்துடன் இணைந்து செயல்பட பிரிட்டன் விருப்பம்

தமிழக மின் தேவையை முன்கூட்டியே துல்லியமாக அறிதல், 'டிஜிட்டல்' தொழில்நுட்பம் உள்ளிட்டவை தொடர்பாக, மின் வாரியத்துடன் இணைந்து செயல்பட, பிரிட்டன் விருப்பம் தெரிவித்துள்ளது. அடுத்த நாள் மின் தேவை எவ்வளவு இருக்கும் என்பதை, மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம், முந்தைய நாளே கணித்து, அதற்கு ஏற்ப உற்பத்தி, கொள்முதல் பணிகளை மேற்கொள்கிறது.

மின் தேவையை முன்கூட்டியே துல்லியமாக கணிப்பது உள்ளிட்ட பணிகளை, மின் வாரியத்துடன் இணைந்து செயல்படுத்துவது தொடர்பாக, சென்னையில் மின் வாரிய அதிகாரிகள், பிரிட்டன் துாதரக அதிகாரிகளுடன், நேற்று ஆலோசனை நடத்தினர்.

இதில், மின் வாரிய தலைவர் ராதாகிருஷ்ணன், பசுமை எரிசக்தி கழக மேலாண் இயக்குநர் அனிஷ்சேகர், பிரிட்டன் காலநிலை மாற்ற ஆலோசகர் நயனிகா, நிலைத்தன்மை காலநிலை மாற்ற ஆலோசகர் க்ரித்திகா குலாட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், மின் தேவையை முன்கூட்டியே துல்லியமாக அறிதல், 'பேட்டரி ஸ்டோரேஜ்' கட்டமைப்பு, தரவு பகுப்பாய்வு, 'டிஜிட்டல்' தொழில்நுட்ப தீர்வு, இணைய பாதுகாப்பு, நுகர்வோர் மைய மேம்பாடு ஆகிய பணிகளில், இரு தரப்பும் இணைந்து செயல்படுவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

**இதுகுறித்து, மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது:**

இந்த திட்டங்களுக்கு மின் வாரியம் செலவு செய்யாது என்றும், பிரிட்டன் தன்னுடைய செலவில் மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இத்திட்டங்கள் தொடர்பாக, இரு தரப்புக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்றும், தெரிவிக்கப் பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

– நன்றி தினமலர்

## நீரேற்று மின் நிலைய திட்டத்தை செயல்படுத்த என்.எல்.சி., விருப்பம்

தமிழக மின் வாரியத்துடன் இணைந்து, நீரேற்று மின் நிலையத்தை அமைக்க, என்.எல்.சி., 'ரென்யூவபிள்' நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

நீர் மின் நிலையத்தில், ஒரு முறை மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட தண்ணீரை, மீண்டும் பயன்படுத்த முடியாது. இதனால், மழை இல்லாத சமயங்களில், நீர் மின் உற்பத்தி முற்றிலுமாக பாதிக்கப்படும்.

அதே சமயம், நீரேற்று மின் நிலையத்தில் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட தண்ணீர், கீழ் அணையில் இருந்து, அதிக திறன் உடைய, 'மோட்டார் பம்ப்' வாயிலாக மேல் அணைக்கு எடுத்து செல்லப்படும். அதை பயன்படுத்தி, எப்போது வேண்டுமானாலும் மின் உற்பத்தி செய்யலாம்.

**கூட்டுமுயற்சி:** நீலகிரி, கன்னியாகுமரி, கோவை, திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாவட்டங்களில், 14,500 மெகாவாட் திறனில், 15 நீரேற்று மின் நிலையங்களை அமைக்க, மின் வாரியத்தின் துணை நிறுவனமான பசுமை எரிசக்தி கழகம் முடிவு செய்துள்ளது. நிதி நெருக்கடியில் இருப்பதால், இந்த மின் நிலையங்களை பொது – தனியார் கூட்டு முயற்சியில் செயல்படுத்த, தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

நீலகிரியில், 1,000 மெகா வாட் திறனில் அப்பர் பவானி நீரேற்று மின் திட்டத்தை, பொதுத்துறையை சேர்ந்த என்.டி.பி.சி., எனப்படும், தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து, பசுமை எரிசக்தி கழகம் செயல்படுத்துகிறது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடக்கிறது. மற்ற மின் நிலையங்களுக்கான சாத்தியக்கூறு ஆய்வு முடிவடைந்த நிலையில், அடுத்த கட்ட பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. இந்நிலையில், மின் வாரியத்துடன் இணைந்து, நீரேற்று மின் நிலையத்தை அமைக்க, பொதுத்துறையை சேர்ந்த என்.எல்.சி., எனப்படும், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் துணை நிறுவனமான என்.எல்.சி., ரென்யூவபிள் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடும் நிதி நெருக்கடி காரணமாக, மின்வாரியத்தின் அனைத்து மின் திட்ட பணிகளும் கடன் வாங்கி தான் மேற்கொள்ளப்படுகின்றன. வனப்பகுதிக்குள் மின் திட்டத்தை செயல்படுத்த, மத்திய அரசின் வனம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு துறைகளிடம் இருந்து, அனுமதி பெறுவது என்பது மிகவும் சவாலானது.

அவற்றுக்கு விண்ணப்பித்தால் அனுமதி கிடைக்க, இரு ஆண்டுகளுக்கு மேல் ஆகலாம். இந்தச் சூழலில், மின் வாரியம் அறிவித்துள்ள நீரேற்று மின் திட்டங்களில், ஏதேனும் ஒன்றை இணைந்து செயல்படுத்த விரும்புவதாக, என்.எல்.சி., ரென்யூவபிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வாய்ப்பை தவற விடக்கூடாது. அதற்கு தாமதம் செய்யாமல், அரசிடம் விரைவாக அனுமதி பெற்று, மின் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்.எல்.சி., அமைக்கும் பட்சத்தில், மத்திய அரசின் அனைத்து துறைகளிடம் இருந்தும் விரைவாக அனுமதி கிடைக்கும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மின் நிலைய பணிகளையும் முடிக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார். 400 மெகா வாட் நீலகிரி, கோவை, திருநெல்வேலி, ஈரோட்டில் மின் வாரியத்துக்கு, 1,923 மெகா வாட் திறனில், 46 நீர் மின் நிலையங்களும்; கோவை காடம்பாறையில், 400 மெகா வாட் திறனில் நீரேற்று மின் நிலையமும் உள்ளன.

– நன்றி தினமலர்

## 3 கோடி ஸ்மார்ட் மீட்டர் கொள்முதல் டெண்டர் எடுக்க பல நிறுவனங்கள் போட்டி

சென்னை : தமிழகம் முழுதும் வீடு உள்ளிட்ட மின் இணைப்புகளில், 3.04 கோடி 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தும் பணிக்கு, ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய, மின் வாரியம் வெளியிட்ட டெண்டரில், 42 நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. தமிழகத்தில் தாழ்வழுத்த பிரிவில் உள்ள, அனைத்து மின் இணைப்புகளிலும், ஆளில்லாமல் மின் பயன்பாட்டை கணக்கெடுக்கும், 'ஸ்மார்ட் மீட்டர்' திட்டத்தை, மின் வாரியம் செயல்படுத்த உள்ளது. 'டெண்டர்' இதற்காக, ஆறு தொகுப்புகளாக, 3 கோடி மின் இணைப்புகளிலும், 4.94 லட்சம் மின் வினியோக டிரான்ஸ்பார்மர்களிலும், ஸ்மார்ட் மீட்டர் பொருத்தி, அதை பராமரிக்கும் நிறுவனத்தை தேர்வு செய்ய, கடந்த மார்ச்சில், 'டெண்டர்' கோரப்பட்டது. அதாவது, மின் வாரியத்தின், 12 மண்டலங்களில், தலா இரு மண்டலங்களுக்கு ஒரு தொகுப்பு என, ஆறு தொகுப்புகளாக 'ஸ்மார்ட் மீட்டர்' கொள்முதலுக்கு, டெண்டர் கோரப்பட்டது. சென்னை, வேலூர் மண்டலங்களுக்கு, 49.34 லட்சம்; காஞ்சிபுரம், விழுப்புரம், 49.61 லட்சம்; கோவை, ஈரோடு, 56.47 லட்சம்; மதுரை, திருவண்ணாமலை, 49.77 லட்சம்; கரூர், திருநெல்வேலி, 49.98 லட்சம்; திருச்சி, தஞ்சைக்கு, 49.67 லட்சம் மீட்டர்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. இவற்றில் 2.50 கோடி ஒரு முனை மீட்டர், 49.47 லட்சம் மும்முனை பிரிவு மீட்டர். திட்ட செலவு, 20,000 கோடி ரூபாய். ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்வதற்கான டெண்டரில் பங்கேற்க, இம்மாதம், 5ம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டது. நேற்று மதியம், 2:30க்கு டெண்டர் புள்ளி திறக்கப்பட்டது.

**விலைப்புள்ளி இது குறித்து, மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது:**

ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை செயல்படுத்துவதற்கான டெண்டரில், அதிக நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. ஐந்து தொகுப்புகளுக்கு தலா ஆறு நிறுவனங்களும், ஒரு தொகுப்புக்கு, 12 நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன. இவற்றின் தொழில்நுட்ப விபரம் விரைவில் சரிபார்க்கப்பட்டு, அதில் தேர்வாவோரின் விலைப்புள்ளி திறக்கப்படும். இம்மாத இறுதிக்குள் ஆணை வழங்கப்பட்டு, செப்., இரண்டாவது வாரத்தில் இருந்து, 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தும் பணிகளை துவக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

– நன்றி தினமலர்

## மின் சாதனங்களை விரைந்து கொள்முதல் செய்ய உத்தரவு

நம் நாளிதழ் செய்தியை அடுத்து, மின்கம்பி உள்ளிட்ட மின் வினியோக சாதனங்களை கொள்முதல் செய்து இருப்பு வைக்குமாறு, பொறியாளர்களுக்கு மின் வாரிய தலைவர் ராதா கிருஷ்ணன் உத்தரவிட்டு உள்ளார்.

தமிழகத்தில் மின்கம்பி உள்ளிட்ட மின்வினியோக சாதனங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், புதிய மின் இணைப்பு வழங்கும் பணியில் தாமதம் ஏற்பட்டு உள்ளது. இதுகுறித்து, நம் நாளிதழில் ஞாயிற்றுக்கிழமை விரிவாக செய்தி வெளியானது.

இதுகுறித்து, சென்னை மின் வாரிய தலைமை அலுவலகத்தில், அதன் தலைவர் ராதா கிருஷ்ணன், இயக்குநர்கள் மற்றும் தலைமை பொறியாளர்களுடன் நேற்று ஆய்வு நடத்தினார்.

அப்போது, மின் கம்பி, மீட்டர், கம்பம் உள்ளிட்ட மின் வினியோக சாதனங்களை விரைவாக கொள்முதல் செய்து, அலுவலகங்களில் இருப்பு வைக்குமாறும், விரைவில் மழைக்காலம் துவங்குவதால் மின் சாதனங்கள் ஒரு மாவட்டத்தில் இல்லை என்றால், அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்து வாங்கி பணிகளை மேற்கொள்ளுமாறும், தெரிவித்தார்.

நான் நேரடியாக களத்திற்கு சென்று, பணியாளர்களிடம் தகவல்களை கேட்கிறேன். என்னிடம் தவறான தகவல்களை தெரிவிக்கக்கூடாது. மின் தடை தொடர்பான புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார்.

– நன்றி தினமலர்

## துணை மின்நிலைய பணியாளர்கள் வேலை நேரத்தில் வெளியே செல்லக் கூடாது மின்வாரியம் எச்சரிக்கை

துணை மின்நிலைய பணியாளர்கள் வேலை நேரத்தில் துணை மின்நிலைய வளாகத்தைவிட்டு வெளியே செல்ல கூடாது என மின்வாரியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மின் தொடரமைப்பு கழகம் வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: உயர் அழுத்த துணை மின்நிலையங்களில் தொடர்ந்து மின்சார உபகரணங்களை கண்காணிப்பது, அவசர காலங்களில் விரைவாக செயல்பட்டு மின் வழித்தடங்களை சீரமைப்பது, மின்தடை நேரங்களில் உடனடியாக செயல்பட்டு மின்விநியோகம் வழங்குவது ஆகிய பணிகளை துணை மின்நிலைய பணியாளர்கள் மேற்கொள்கின்றனர்.

இவர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வரும் நிலையில், சில நேரங்களில் ஒரே நேரத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக பணியாளர்கள் இருப்பதாகவும், ஒரு சிலர் கூடுதலாக பணியை நீட்டித்து வேலை செய்வதாகவும், பணி நேரத்தின்போது வெளியே சென்று வருவதாகவும் புகார்கள் வந்துள்ளன. இது மின் பகிர்மானத்தின் செயல்திறனை குறைப்பதோடு, பணியாளர் நலனையும் பாதிக்கிறது.

**பணியாளர் அட்டவணை:** இதை தடுக்க, பின்வரும் அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும். துணை மின்நிலைய பணியாளர்கள் அட்டவணையை செயற்பொறியாளர் தயாரிக்க வேண்டும். அதன்படி மட்டுமே பணியாளர்கள் வருவதை உறுதி செய்ய வேண்டும். கூடுதல் நபர்கள் பணியாற்றுவதை அனுமதிக்க கூடாது. இது அவர்களது விருப்பத்துக்கு ஏற்ப பணியாற்றுவதாக மாறிவிடும். பணி நேரத்தின்போது, துணை மின்நிலைய வளாகத்தைவிட்டு பணியாளர்கள் வெளியே செல்ல கூடாது.

பராமரிப்பு உதவி செயற்பொறியாளர் அல்லது உதவி பொறியாளர் உச்ச நேரங்கள் மற்றும் அவசர காலங்களில் துணை மின்நிலைய பணியாளர்களுக்கு உதவ வேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை முதன்மை பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். இதில் கவனக்குறைவாக இருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மின் பொறியாளர்களுக்கு பாதுகாப்பு குறித்த பயிற்சி

குன்னத்தூரில் மின்வாரிய பொறியாளர்களுக்கு பாதுகாப்பு குறித்த பயிற்சி முகாம் திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் திருப்பூர் கிளை சார்பில் நடைபெற்ற இந்த முகாமிற்கு சங்கத்தின் மாநில தலைவர் பொறியாளர் அ.அந்தோணி படோவராஜ் தலைமை வகித்தார், காங்கேயம் செயற்பொறியாளர் ஜெகதீஸ்வரி வரவேற்றார்.

இதில் அவசர காலத்தில் துரிதமாகவும், பாதுகாப்பாகவும் செயல்படுவது, நேர மேலாண்மை, மன அழுத்த தீர்வு உள்ளிட்டவை குறித்து மாநில அமைப்பு செயலாளர் எஸ்.சம்பத், திருப்பூர் கிளை துணைத் தலைவர் பி.கோபு, கோவை மண்டல செயலாளர் பி.கமல்குமார் ஆகியோர் மின்வாரிய பொறியாளர்களுக்கு பயிற்சி அளித்தனர், குழுவாகப் பிரித்து அளிக்கப்பட்ட இந்த பயிற்சியில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் திருப்பூர் மற்றும் பல்லடம் மின்பகிர்மான வட்ட துணை மின் நிலைய பொறியாளர்கள் பங்கேற்றனர். உதவி செயற்பொறியாளர் ரவி, இணைச்செயலாளர் பாலசுப்பிரமணி, கிளைச் செயலாளர் சுரேஷ்ராஜ் ஆகியோர் முகாமை ஒருங்கிணைத்தனர்.


## Solar power output in TN hits new peak

Solar power generation in TN reached a new miles tone on Wednesday, with an all time high absorption of 49.30mn units - nearly 13% of the total consumption by the state. In addition, TN Green Energy Corporation Ltd (TNGECL) absorbed 67.03mn units of wind power, taking the total green energy contribution to 30% of the total electricity needs for Wednesday.

On July 5, TNGECL broke the previous record of 48.4 million units (set on Sept 16, 2024), when it absorbed 48.50mn units. The 49.3mn units are enough for Chennai's electricity needs on a Sunday, when commercial establishments are closed. The peak solar power generation also set a record on Wednesday, as generation reached 6,793 megawatts, surpassing the previous record of 6,579 megawatts recorded on February 16 this year. Despite rainy weather and cloudy conditions industricts, solar power generation reached a milestone as the entire energy generated was absorbed without curtailment by the power utility said Renewable Energy Producers association.

**-Thanks Times News Network**

## TN Sets Records in Wind power generation




Wind power Generation in the state has crossed the 100-million-unit mark for the 23rd time this year. breaking the previous annual record of 21 in 2022 and 2023.

On Saturday, TN Power Distribution Corporation Ltd (TNPDCL) absorbed 113.71 million units of wind energy, marking one of the highest single day evacuations of green power this year.

The all-time single day record of 120.25 mil-lion units, achieved on July9, 2022, still stands.

Since April1this year; however, wind power generation hass urged ahead, with TNPDCL evacuating 7, 263.82 million units up to Saturday—the highest ever for this period. This is nearly 2,000 million units more than the corresponding period last year, when 5, 314 million units were generated between April 1 and July 25. During the same period in 2023, wind power stood at 5.733.015 million units.

Renewable Energy Producers Association president and chief advisor K Venkatachalam credited the milestone to “seamless coordination between TNPDCL, Tantransco, wind energy generators, and forecasters.”

In 2024-25. TN generated 12, 778 million units of wind energy. With favourable wind forecasts in the coming days, officials and industry experts believe the state is on track to set a new benchmark for wind power generation this year.

**- Thanks Times of india**

## TCCS TRAINING PROGRAMME - TIRUPPUR BRANCH

Once again an excellent Training Programme was conducted on 09.08.2025 for JE-II SS Operators. More than 20 participants took part in the program. Kudos to the young Tiruppur Team comprising beloved Er. S.Suresh Raj - Br.Sec, Er. T.Balasubramanian - Joint Sec., Er. B.Thirumurugan - Org. Sec and others for Organising such a massive programme.

It was really great, fantastic team of trainers comprising Er. B.Gobu and others made it special. A short session by beloved Er. R.Santhosh Kumar Secretary / KBF made it extra special.National trainer and Sangam's Secretary / Organisation beloved Dr. S.Sambath sir showed his class yet again by handling crucial subjects with utmost profession.

Special praise to Branch Secratary / Covai beloved Er. K.Gnanaprakasam for being in the thick of things throughout. Special thanks and appreciation to AEE / Kunnathur beloved Er. R.Ravikumar and Staff for their excellent support. Kudos to Regional Secretary / Covai beloved Er. P.Kamal Kumar for orchestrating such a Wonderful event.

The highest point of the day was the participation of EE / Kangeyam beloved Er. D.Jagadeeswari who graced the occasion and inaugurated the event. A staunch member of our Sangam inaugurating the event was quite a blessing. EE Madam gave a special address to the young participants detailing her 35 years arduous journey from TA to EE and how our Sangam has been there with her throughout. Heartfelt thanks to beloved EE Madam for the presence.

Altogether Sangam emerged victorious at the Branch and also the entire Region. Long Live Sangam.

Er. A.Antony Padvoraj
President / TNEBES.

## Supreme Court frowns on Govts Hiring Temporary, Daily-wage Employees

New Delhi: Deprecating the practice of Centre and states not appointing permanent employees and getting their work done by temporary and daily-wage staff, Supreme deal with perennial work on a sanctioned footing, creating a budget for the purpose, it held Court on Tuesday sald govts should behave like a “constitutional employer" and not like a mere market player, It directed the UP govt to regularise from 2002 the services of class 3 and 4 employees who have been working for the state Education Services Selection Commission.

A bench of Justices Vikram Nath and Sandeep Mehta said that Governments should not in voke budgetary constraints to justify adhocism, The state, as a constitutional employer should maintain a higher standard and deal with perennial work on a sanctioned footing, creating a budget for the purpose, it held,.

"We think it necessary to recall that the state (here referring to both the Union and the state governments) is not a mere market participant but a constitutional employer. It cannot balance budgets on the backs of those who perform the most basic and recurring public functions Financial in stringency certainly has a place in public policy, but it is not a talisman that overrides fairness, reason and the duty to organise work on lawful lines,” the bench said.

The court passed the order on a petition seeking regularisation of jobs of people who had been performing peon/attendant duties for the commission since1989.

"The state departments must keep and produce accurate establishment register's, muster rolls and outsourcing arrangements, and they must explain, with evidence, why they prefer precarious engagement over sanctioned posts where the work is perennial. If constraint is invoked, the record should show what alternatives were considered, why similarly placed workers were treated differently, and how the chosen course aligns with Articles 14, 16 and 21 of the Constitution of India.

Sensitivity to the human consequences of prolonged insecurity is not sentimentality. It is a constitutional discipline that should inform every decision affecting those who keep public offices running, the bench said.

## கண்ணீர் அஞ்சலி

பொறியாளர் குடும்பத்தினர்கள்

1. 26.07.2025 அன்று **பொர்.N.கண்ணன்**, உதவி செயற்பொறியாளர் / EM-1 / TTPS அவர்களின் **தாயார்.** 9894304386.
2. 31.07.2025 அன்று **பொர்.V.முனிராஜ்**, உதவி செயற்பொறியாளர்/ O & M / N / Bavani / GEDC / Gobi, அவர்களின் **மனைவி.** 9442818773.
3. 09.08.2025 அன்று **பொர்.R.சாந்தி**, இளநிலைப் பொறியாளர்/110KV, து.மி.நி வடக்காத்திப்பட்டி/ திருப்பத்தூர் மி.ப.வ., அவர்களின் **தாயார்.** 6383353143.

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினர்களை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# 79 வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து விருது பெற்ற நமது சங்கத்தின் பொறியாளர்கள்



பொர்.G.ராதாகிருஷ்ணன், பொ.கு.உ/காஞ்சிபுரம்,
பொர்.R.நந்தகோபால், இ.பொ./முசரவாக்கம்,
பொர்.S.தமிழ்செல்வன், இ.பொ./கலியம்பூண்டி,
பொர்.N.உதயகுமார், இ.பொ./தெ. சுங்குவார்சத்திரம்.



பொர்.R.ராகவன், கோட்டச்செயலாளர்,
பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் கிளை.



பொர்.ராமநாதன்,
செயற்பொறியாளர்/ MRT/ ஈரோடு கிளை



பொர்.M.சரவணகுமார், உதவி பொறியாளர்,
அமைப்புச்செயலாளர், வேலூர் கிளை



பொர்.V.பாரதிராஜன், உதவி செயற்பொறியாளர், கடலூர் கிளை




தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் திருப்பூர் கிளை சார்பில் 09.08.2025 அன்று குன்னத்தூரில் நடைபெற்ற இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை பொறியாளர்களுக்கு துணை மின் நிலைய இயக்குநர் குறித்த TCCS பயிற்சி முகாமில் கலந்துகொண்டவர்கள்.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam